# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மார்ச் 2009 ஜீவியம் 14 மலர் 11

*இம்மாத மலரில்....*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அன்னைக்குச் செய்யும் காலைப் பிரார்த்தனை | 2 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 4 |
| அன்பர் கடிதம் | 5 |
| லைப் டிவைன் - கருத்து | 9 |
| இம்மாதச் செய்தி | 15 |
| சாவித்ரி | 16 |
| லைப் டிவைன் | 18 |
| கார் கம்பெனியில் நிகழ்ந்த அற்புதம் | 28 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 31 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 41 |
| அடுத்த கட்டத்தில் - Mother Response | 45 |
| நண்பனும் எதிரியும் பொறாமையும் புகழும் | 48 |
| மனத்தின் நிலைகள் பல | 51 |
| வாழ்வின் பெருவழிகள் | 58 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

அனுபவம் அறிவாக ஆயிரம் ஆண்டாகும். அறிவு அனுபவமாக நூறாண்டாகும். ஆன்மா அதே நிமிடம் பலிக்கும்.

எப்படிப் பார்த்தாலும் யாரும் எதையும் செய்ய முடியும். திறமைக்கு அளவில்லை. நம்பிக்கைக்கு அளவுண்டு.

நம்மை எப்படி நடத்த விரும்புகிறோமோ அதுபோல் நடக்கும் இடங்களில் எல்லாம் அன்னை தவழ்வதைக் காணலாம்.

# அன்னைக்குச் செய்யும் காலைப் பிரார்த்தனை

N. அசோகன்

## காலைப் பிரார்த்தனைக்கான முன்னுரை

*நம்முடைய அன்றாட வாழ்க்கை தினந்தோறும் மகிழ்ச்சிகரமாகவும், உபயோககரமாகவும், பாதுகாப்பாகவும் அமைந்தது என்றால் நாம் எல்லோரும் மிகவும் சந்தோஷப்படுவோம். ஒவ்வொரு நாளும் நாம் அன்னைக்கு மகிழ்ச்சியும் பாதுகாப்பும் வேண்டி பிரார்த்தனை செய்துவிட்டு அன்றைய நாளை துவங்கினோம் என்றால் நாம் விரும்பியபடியே அன்றைய பொழுது அமையும்என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் சொல்கிறார்கள். அதன்படி பார்க்கும்பொழுது அன்னையிடம் நாம் விரும்புகின்ற மகிழ்ச்சியையும், பாதுகாப்பும் கேட்டு பிரார்த்தனை செய்துவிட்டு நாளைத் துவங்குவது மிகவும் நல்லது என்றாகிறது. இப்படி ஒரு பிரார்த்தனையை நாம் காலையில் எழுந்தவுடன் முதல் வேலையாகவும் செய்யலாம், அல்லது காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அன்றைய வேலைகளைத் துவங்குவதற்கு முன்னாலும் செய்யலாம்.*

## பிரார்த்தனை

அன்புள்ள அன்னையே! இன்றைய நாளை நான் இப்பொழுது துவங்குகிறேன். இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாகவும், பயன் உள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்கட்டும். நல்ல செய்திகள் மட்டும் என் காதுக்கு வரட்டும். இன்று நான் என்ன செய்ய தீர்மானித்து இருக்கிறேனோ அவையெல்லாம் கூடி வரட்டும். என்னுடைய உடல் தெம்பு இன்று சிறப்பாக இருக்கட்டும். என்னுடைய நேரமும், என்னுடைய எனர்ஜியும் பயனுள்ள வகையில் செலவாகட்டும். இன்று நான் யார் யாருடன் எல்லாம் உறவாடுகின்றேனோ அந்தத் தொடர்பெல்லாம் சுமுகமாகவும், நட்புணர்வு மிகுந்ததாகவும்



இருக்கட்டும். என்னுடைய பணம் பயனுள்ள வகையிலும், முறையான வழியிலும் செலவாகட்டும்.

இன்று நடக்கும் நிகழ்ச்சிகளெல்லாம் என்னுடைய சந்தோஷத்தை அதிகரிப்பதாக இருக்கட்டும். என்னுடைய உடல் நலத்திற்கும், என்னைச் சேர்ந்தவர்களுக்கும், என்னுடைய வேலைக்கும், என்னுடைய உடமைகளுக்கும் உங்கள் பாதுகாப்பு கிடைக்கட்டும். என்னுடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், செயல்பாடுகள்என்று எல்லாவற்றையும் தாங்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து நல்ல எண்ணங்கள், நல்ல உணர்ச்சிகள் மற்றும் நல்ல செயல்பாடுகள் மட்டும் இருக்குமாறு அமைத்துக் கொடுக்கவும்.

இந்த நிமிடத்திலிருந்து இரவு உறங்கப் போகும்வரை சூட்சுமமாக என்னுடனேயே இருக்கவும். இப்படி சூட்சுமச் சூழலில் என்னுடன் இருந்துகொண்டு என் வேலைகளை எல்லாம் நல்லபடியாக நடத்திக்கொண்டு போகவும், நான் தூங்கச் செல்லும் பொழுது உடல் களைப்பை அகற்றி புத்துணர்வும், புதுத் தெம்பும் கொடுக்கக்கூடிய நல்ல ஆழ்ந்த தூக்கத்தை வழங்கவும்.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்மை மாற்றிக் குறைகளை நீக்கலாம். அருளால் வரும் குறைகளை அதுபோல் மாற்ற முடியாது. அடுத்த உயர்ந்த நிலையில் அவற்றைத் திருத்த வேண்டும்.

***அருளால் குறை வரும்.***

***தரம் உயர்ந்தால் அது திருந்தும்.***

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

76. *நாய் காணின் கல் காணாவாறு.*
*[நாயைக் கண்டால் கல்லை காணோம்.*
*கல்லைக் கண்டால் நாயை காணோம். (வழக்கிலுள்ள பழமொழி)]*

✡ **பிரச்சினை வரும் பொழுது அன்னை மறந்துவிடுகிறது.**

77. *புறஞ் செய்ய செல்வம் பெருகும்.*
*அறஞ் செய்ய அல்லவை நீங்கிவிடும்.*
*(அல்லவை - தீமை)*

✡ **திறமை பலன் தரும்.**
**சமர்ப்பணம் தோல்வியை அகற்றி வெற்றி தரும்.**

78. *பசு கறுப்பானால் பாலும் கறுப்பா.*

✡ **மனிதன் சிறியவனானால் பிரார்த்தனை சிறியது ஆகாது.**

79. *தோல்வி வெற்றியைத் தருகிறது.*

✡ **தோல்வி ரூபத்தில் வரும் வெற்றி அல்லது**
**தோல்வியாக எழும் பெரும்வெற்றி.**

**(இயல்பாக வரும் வெற்றியைவிட தோல்வியில் ஆரம்பிப்பது பெரிய வெற்றியில் முடியும். முடிவில் வெற்றி பெறாத தோல்வி உலகில் இல்லை. அன்னை அதை உடனே அல்லது முதலிலேயே செய்து விடுகிறார்).**

80. *அனுபவம் மிகச்சிறந்த ஆசான்.*

✡ **ஆசான் கொடுத்த அறிவுரை தவறலாம்.**

**அனுபவம் தருவது தவறாது.**

**அனுபவம் வாழ்வு. கையால் செய்த காரியம் தவறினால் மனம் படிப்பினை பெறுகிறது. மனம் உடலிடமிருந்து அறிகிறது. அது உடல் பரிணாமத்தால் உயர்ந்து மனத்தை அடைவது தவறாது.**

*தொடரும்....*

❀❀❀



# அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*
*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*
*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

அன்னையின் பொற்பாதங்களுக்குச் சமர்ப்பணம்.

தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு,

எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 02.08.2008 அன்று தங்களுக்கு எழுதிய கடிதத்தில் ஒப்பந்த கணினி ஆசிரியராக 1999ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18ஆம் நாள் பணியில் சேர்ந்து, தொடர்ந்து 9 வருடங்களாகப் பணியாற்றி, சுமார் 1880 கணினி ஆசிரியர்களில் ஒருவனான நான் பட்ட துயரங்கள் பற்றியும், எங்களின் பணி நிரந்தரம் தொடர்பாக நாங்கள் செய்த போராட்டங்கள் பற்றியும், ''அன்னை பக்தர் ஒருவருக்குக் கிடைக்கும் பலன், அனைவருக்கும் கிடைக்கும்'' என்ற வகையில், எங்களின் பணி நிரந்தரம் தொடர்பாக, தாங்கள் எங்களுக்காக பிரார்த்தனை செய்து, அன்னையின் அருளாசியையும், அனுப்பி வைக்குமாறு தங்களுக்கு விரிவான கடிதம் எழுதியிருந்தேன்.

இதற்கு 07.08.2008 அன்று தங்களால் அனுப்பப்பட்ட பதில் கடிதம் கிடைக்கப்பெற்றேன். தாங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தவாறு, எனது பிரச்சினைகளை வரிசைப்படுத்தி தினமும் காலை மற்றும் மாலையில் அன்னையிடம் நம்பிக்கையுடன் சொல்லி வந்தேன்.

எனது நம்பிக்கை வீண்போகவில்லை. பெஞ்ச்கோர்ட்டில் விசாரணை முடிந்து, 22.08.2008 அன்று வந்த தீர்ப்பில், புதியதாக உருவாக்கப்பட்ட 1880 கணினி ஆசிரியர் பணியிடங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களுக்கு, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் சிறப்புத் தேர்வுக்கு அனுமதி அளித்து உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது. பணி நிரந்தரம் செய்ய நடத்தப்படும் சிறப்புத் தேர்வின் அனைத்து நடவடிக்கைகளையும் ஆறு

மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது.

இதற்கடுத்து அரசின் துரித நடவடிக்கையால், எங்களின் பணி நிரந்தரத்திற்கான சிறப்புத் தேர்வினை 12.10.2008 அன்று சென்னையில் நடத்துவதாக அரசு அறிவித்தது. இதனால் தேர்வுக்குத் தயாராகும் வகையில், தேர்விற்காக மிகுந்த சிரத்தையுடன் படித்துக் கொண்டிருந்தோம். இந்நிலையில், ஏற்கெனவே வழக்கு தொடர்ந்து, வழக்கினை 1½ வருடங்களாக இழுத்து, எங்களின் பணி நிரந்தரத்தினை விரும்பாத B.Ed. படித்த கணினி பட்டதாரிகள் தற்பொழுது எங்களுக்கு ஆதரவாக 22.08.2008 அன்று வந்த தீர்ப்பினால் கொதித்தெழுந்தனர். இத்தீர்ப்பினை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்போவதாகக் கலக்கத்தை ஏற்படுத்தினர்.

தேர்விற்காகப் படித்து வந்த நாங்கள், 05.10.08 அன்று B.Ed. படித்த பட்டதாரிகள் சுப்ரீம்கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளதாக அறிந்து வேதனையுற்றோம். *"அன்னையின் மந்திரங்கள்"* (Mantras of the Mother) புத்தகத்தில், அக்டோபர் 5இல்,

*"இறைவனே உண்மையான உள்ளார்ந்த*
*மகிழ்ச்சியை வழங்கும்போது, அதைப்*
*பறித்துச் செல்லும் சக்தி உலகில்*
*எதற்கும் கிடையாது"*

*- என் ஆசிகள்*

என்று அன்னை அவர்கள் கூறியிருந்த மந்திர வார்த்தைகள் எங்களுக்கு மிகப்பெரிய ஆறுதலைத் தந்தன. இதன் பிறகு, அன்னையின் அருள் என் வாழ்வில் செயல்பட்டதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

12.10.2008 அன்று, அரசு அறிவித்திருந்த சிறப்புத் தேர்வில் கலந்துகொள்ளும்பொருட்டு, ஒரு நாள் முன்னதாகவே புறப்பட்டு சென்னை சென்றோம். 11.10.2008 அன்று, சென்னையில் ஒரு கெஸ்ட் ஹவுசில் தங்கித் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தோம்.



12.10.2008 - ஞாயிற்றுக் கிழமை

அன்னையின் அருள் சென்னை முழுவதும் மழையாகப் பெய்தது. காலைமுதல் மாலைவரை மழை கொட்டித் தீர்த்தது. எங்களின் தேர்வு மையங்களுக்கு வெளியே B.Ed. படித்த கணினி பட்டதாரிகள் தேர்வு நாள் அன்று போராட்டம் நடத்துவதாக இருந்தனர். ஆனால், அன்னையின் அருளால், சென்னையில் அன்று பெய்த புயல் மழையால், அப்போராட்டம் கைவிடப்பட்டது.

12.10.2008, மதியம் 1 மணி அளவில், தேர்வு முடிந்து வெளியே வந்தோம். அடுத்த நாள் எனக்கு B.Ed. - Counselling class கோயம்புத்தூரில் இருந்ததால் அன்று இரவே நான் சென்னையில் இருந்து கோயம்புத்தூருக்கு பஸ் ஏறிவிட்டேன். அடுத்த நாள் 13.10.08 அன்று B.Ed. classஇல் கலந்து கொள்ளும் பொருட்டு, கல்லூரிக்குப் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தேன்.

அப்பொழுது, 12.10.08 அன்று, தேர்வு முடிந்த 7 மணி நேரத்திற்குள் தேர்வு முடிவு, ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னையால் வெளியிடப்பட்டது என்றும், 13.10.08 அன்று காலை, எங்களின் தேர்வு முடிவுகள் ஒட்டப்பட்டிருப்பதாகவும் வந்த போன் மெசேஜில் இன்ப அதிர்ச்சியுற்றேன். அச்சமயம், வெளியே சொல்லுவதற்கு கௌரவமாக எனக்கு நல்ல மதிப்பெண்களைக் கொடுக்குமாறு அன்னையிடம் பிரார்த்தனை செய்துகொண்டேன். பிரார்த்தனை செய்துகொண்டே பேருந்தின் சன்னல் வழியாக வெளியே பார்க்கும்பொழுது, ஒரு கடையின் பெயர்ப் பலகையில் "ஸ்ரீ அன்னை" என்று எழுதியிருப்பதை பார்த்து மிகவும் பரவசமானேன். கல்லூரி சென்று சேருவதற்கு முன்பாகவே என் மதிப்பெண்கள் 86என்று என் நண்பரின் சகோதரர் மூலம் தெரிந்துகொண்டேன்.

என் நண்பர்களுக்கு மத்தியில் நான்தான் அதிக மதிப்பெண் பெற்றிருந்தேன். அன்னைக்கு எனது பரிபூரண நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன், கண்ணீர் மல்க.

பிறகு, 08.11.2008 மற்றும் 09.11.2008 ஆகிய இரு தினங்களில் எங்களின் பணி நியமனத்திற்கான கலந்தாய்வு சென்னையில்

நடைபெற்றது. அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்ததால் என்னுடைய 310 தர வரிசை எண்படி, 08.11.2008 அன்றே எனது பணி நியமனத்திற்கான அரசு ஆணை வழங்கப்பட்டது.

10.11.2008 அன்று, முற்பகல் நான் விரும்பியவாறே எனது வீட்டிற்கு அருகில் உள்ள பள்ளியில் கணினி பயிற்றுநராக பணியில் சேர்ந்து கொண்டேன்.

இவ்வாறாக, எனது பணி நிரந்தரம் தொடர்பாக 02.08.08 அன்று நான் எழுதிய கடிதத்திற்குப் பிறகு, அன்னை என் வாழ்வில் நடத்திய அற்புதங்கள், வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. 1880 கணினி ஆசிரியர்களும் அன்னைக்கு கடமைப்பட்டுள்ளோம். அன்னை பக்தனாகிய எனக்குக் கிடைத்த பலன், அனைவருக்கும் கிடைத்தது. ஒரு சிலர் less qualification மற்றும் break of service பிரச்சினையில் உள்ளனர். அவர்களுக்கும் ஒரு நல்ல தீர்வு வர வேண்டும். அன்னைக்கும், பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கும் கோடானு கோடி நன்றியை அவர்களின் பொற்பாதங்களில் உரிதாக்குகிறேன். எனது பணிவான நன்றியையும் வணக்கத்தையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- *B. பிரபாகர், தர்மபுரி*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அருளால் அணுவெல்லாம் நிறைந்த சூழலில் ஆசையை அழித்தவன் பிராணமயப் புருஷனைக் காண்பதற்குப் பதிலாக, அதைவிட உயர்ந்த புருஷர்களையும் காண முடியும். தங்கமயமான புருஷனையும் காணலாம்.

***அருளால் அணுவெல்லாம் நிறைந்தால்***
***புருஷன் தங்கமயமாவான்.***





## பிரம்மம் சிருஷ்டிக்கப்படவில்லை, அது சிருஷ்டிக்கவுமில்லை *(P.333)*

பிரம்மத்தை ஆதியும் அந்தமுமில்லாதது என்கிறோம். ஆதி என்றால் மூலம், பிறப்பு. நமக்கெல்லாம் பிறப்புண்டு, இறப்பும் உண்டு. நம்மால் பிறப்பில்லாத ஒன்றை நினைத்துப் பார்க்க முடியாது. காற்றுக்கு, மலைக்கு மூலம் உண்டா எனில் ரிஷிகள் அந்த மூலத்தை விவரித்துள்ளனர். விஞ்ஞானிகளும் அதைக் கூறுகின்றனர். காலம் மூலம் பெற்றது என்பதை ரிஷிகள் விளக்குகின்றனர். *பிரம்மத்திற்கு மட்டும் மூலமில்லை. பிரம்மத்தின் ஒரு குணம் தலைப்பில் வருகிறது. சமஸ்கிருதச் சொல் சிருஷ்டி.* தச்சன் மேஜை செய்கிறான். நாம் ஒரு சமையல் செய்கிறோம். தச்சன் மேஜையை சிருஷ்டி செய்வது போல சமையலை, ஒரு புத்தகத்தை நாம் சிருஷ்டிக்கிறோம். அதாவது இல்லாததை உற்பத்தி செய்கிறோம். சிருஷ்டிஎன்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு உற்பத்தியெனப் பொருளில்லை. இருப்பதை வெளிப்படுத்துவதுஎனப் பொருள். சுயம், சுயம்பு, தானே உற்பத்தியாகி, தானே இருப்பதுஎன்பது பிரம்மத்திற்குரிய விளக்கம்.

The Life Divineஇல் பிரம்மம்என்ற கருத்து 47 இடங்களில் விளக்கப்படுகிறது. மேலும் 54 இடங்களில் சொல்லாக வருகிறது. அவற்றுள் தலைப்பு ஒன்று.

✡ **ரிஷிகள் சொல்லும் பிரம்மம் அக்ஷரபிரம்மம்.**
**அக்ஷரபிரம்மமும், க்ஷரபிரம்மமும் சேர்ந்த பிரம்மம் உண்டு.**
**அக்ஷரபிரம்மத்தில் தீமை, மரணம், வலி, நோயுண்டு.**
***இரண்டும் சேர்ந்த முழுமை ஸ்ரீஅரவிந்தபிரம்மம்.***
***இதில் மரணம், நோய், வலி, தீமையில்லை.***
***இதன் சிருஷ்டி கர்மத்திற்குக் கட்டுப்பட்டதில்லை.***
***அதை அற்புதம் என்கிறார் பகவான்.***

**அக்ஷர பிரம்மம் காலத்தைக் கடந்தது.**

**ஸ்ரீஅரவிந்த பிரம்மம் மூன்றாம் நிலைக் காலத்தைச் சேர்ந்தது.**

**அக்ஷர பிரம்ம சிருஷ்டியில் முரண்பாடுண்டு.**

**ஸ்ரீஅரவிந்த பிரம்ம சிருஷ்டியில் அவை உடன்பாடாகின்றன.**

**இங்கு ஜடமும், ஆன்மாவும் பிரபஞ்சத்திலும், பிரம்மத்திலும் இணைகின்றன.**

**ஸ்ரீஅரவிந்த பிரம்மம் 3 நிலைகளில் உள்ளது.**

1) **மனிதன் அறியும் அகங்காரம்.**
2) **பிரபஞ்சமறியும் ஜீவாத்மா.**
3) **கடந்ததில் உறையும் Self பிரம்மம்.**

❀ ***அக்ஷர பிரம்மமானாலும், ஸ்ரீஅரவிந்த பிரம்ம-மானாலும் அவற்றின் சிருஷ்டியில் கற்பக விருக்ஷம், காமதேனு, அட்சயப் பாத்திரம் உண்டு.*** **பிரம்ம தண்டமும் இதற்குண்டு. எடுக்க எடுக்கக் குறையாது.**

**எந்தத் தாக்குதலும், எதிர்ப்பும் பிரம்மதண்டம் விழுங்கக்கூடியது.**

**அக்ஷரபிரம்மத்திற்கு எதிர்ப்பு எழும், தண்டம் விழுங்கும்.**

***ஸ்ரீஅரவிந்தபிரம்மம் எதிர்ப்பே எழாத அளவு வலிமை பெற்றது.***

பகவான் புலித் தலையின் மீது இடறி விழுந்து தொடை எலும்பு முறிந்த பொழுது, ''நான் அன்னையின் தலை மீதுள்ள தாக்குதலைக் கவனித்திருந்த பொழுது தவறினேன்'' என்றார். வேறொரு சமயம் அந்நிகழ்ச்சியை விளக்கும் வாயிலாக, ''என்னை எந்த தீய சக்தியும் தாக்காதுஎன நான் நினைத்துவிட்டேன்'' என்றார். 1920வாக்கில் பகவான் வீட்டில் கல் ஏராளமாக விழுந்த பொழுது அவர் அறையில் மட்டும் கல் விழவில்லை. நம்மவர் பகவானை ரிஷியாக வணங்குகின்றனர். அவதாரப்புருஷன்என்று நம்புகின்றனர்.



இறைவனின் ஓர் அம்சம் உலகில் மனிதனாக அவதரிப்பது அவதாரம். அன்னை, ''பகவான் இறைவனேயாகும். முழு இறைவனில்லை, இறைவனின் பகுதி'' என்கிறார். *பகவான் இறைவனின் அம்சமில்லை, இறைவனின் பகுதி.* அப்படியிருக்க ஏன் அவருக்கு கால் முறிந்தது எனக் கேள்வி. நாமறிந்தவரை கடவுள்களை நாம் துதித்தால், அவர்கள் மகிழ்ந்தால் வரம் தருவார்கள்எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். துவார பாலகரை ரிஷிகள் சபித்தபொழுது மகாவிஷ்ணு, ''சாபத்தை விலக்கும் சக்தி எனக்கில்லை. சீக்கிரம் விடுபட வழி சொல்கிறேன்'' என்றார். 1900 வரையும், 1960 வரை இந்திய சர்க்காரை நாம் அறிவோம். 1848இல் கார்ல் மார்க்ஸ் உலகத் தொழிலாளரைப் புரட்சி செய்ய அழைத்தார். 1917இல் சோவியத் சர்க்கார் தொழிலாளி சர்க்காராக ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் கம்யூனிஸ்ட் வசம் போகாமலிருக்க 1900 முதல் அந்நாடுகள் தொழிலாளர் சார்பாக, சட்டம் இயற்றினர். (Welfare state) பொது நல சர்க்கார் ஏற்பட்டு சில வசதிகளை மக்களுக்குச் செய்தனர். அவற்றுள் ஒன்று இலவசக் கல்வி.

பகவான் பிறந்தபிறகு உலகின் இருளை அவர் அழிக்க முற்பட்டார். அதுவரை எந்த தெய்வமும் ஏற்காத பணி அது. உலகின் இருளை பகவான் அழிக்க முற்பட்டதால் உலக சர்க்கார்கள் மக்கள் ஏழ்மை, அறியாமை, நோயைப் போக்க ஓரளவு முன் வந்தனர். 1967 முதல் உலக சர்க்கார்கள் அனைத்தும் சத்தியஜீவிய சக்திக்கு உட்பட்டதாக பகவான் சூட்சும உலகில் அன்னையிடம் கூறினார். இப்பொழுது கல்வி இலவசம். புதுவையில் மருத்துவக் கல்லூரி, என்ஜினீயரிங் கல்லூரி மாணவர்கள் தாங்கள் செலுத்திய பீஸைத் திரும்பப் பெறுகின்றனர். தொழில் செய்ய சர்க்கார் முதல் தருகிறது. ஏராளமாக ரோடு போடப்படுகிறது. விவசாயத்திற்கு இலவசமாகக் கரண்ட் தரப்படுகிறது. 2½ இலட்சம் கோடி ரூபாய் விவசாயக் கடனாக வருகிறது. 60,000 கோடி ரூபாய் விவசாயக் கடன் நிலுவையை சர்க்கார் தள்ளிக் கொடுத்தது. ஏது பணம்?

''நானென்ன ரிஸர்வ் பேங்கா?'' எனக் கேட்ட நாட்களுண்டு.

இப்பொழுது ரிஸர்வ் பேங்க் காலி, மக்களுக்குக் கடன்

பட்டுள்ளது. இலட்சக்கணக்கான கோடி ரூபாய் கடன்பட்டுள்ளது. அந்தக் கடன் நாட்டு வருமானத்தில் பெரும்பங்கு. உலகிலுள்ள எல்லா அரசுகளும் அப்படிக் கடன்பட்டுள்ளது. சர்க்கார் அக்கடனுக்கு வட்டி தருகிறது. தனிப்பட்டவர் கடன்தொகை திரும்பக் கேட்டால் கொடுக்கிறது. அனைவரும் ஒரே சமயத்தில் கேட்டால் தர முடியாது.

- ✡ *சர்க்கார் மக்கள் அன்றாட வாழ்வின் பொறுப்பை ஏற்றால் திருப்பித்தர முடியாத கடனுக்கு ஆளாகிறது.*
- ✡ *அதைப்போல் உலக மாந்தர் இருளை அழிக்கும் பணியை - இதுவரை தெய்வங்கள் ஏற்காத பணியை - பகவான் ஏற்றதால் தீய சக்திகள் அவரைத் தாக்க முடிந்தது.*

ஸ்ரீஅரவிந்தபிரம்மத்தின் அம்சங்கள் சிறப்பானவை, பிரம்மத்தின் அம்சங்களைக் கடந்தவை.

1. **பிரம்மம் அசையாது. ஆனால் அதைப் பிடிக்க முயன்றால் நமக்கு முன் போகும்.**
2. **துண்டாட முடியாத பிரம்மம், துண்டுகளாகக் காட்சியளிக்கும்.**
3. **அகண்டமும், அணுவும் ஒரே சமயத்தில் இணைந்துறையும்.**
4. **மனிதனுக்கு முடியாதனவெல்லாம் பிரம்மத்திற்கு முடியும்.**
5. **எந்தக் குணமும் ரூபமற்றது, எல்லாவற்றையும் சிருஷ்டிக்க வல்லது.**
6. **சர்வம் பிரம்மம்.**
7. **நாமும் பிரம்மம்.**
8. **நாம் நம்மை பிரம்மம்என அறிந்தால், நம் வாழ்வு அடிப்படையில் மாறும்.**

யோகத்தகுதி பெற்ற அன்பர்கள் பலருண்டு. பகவானும், அன்னையும் *சித்தியாகப் பெற்றவை இதுவரை உலகமறியாத பெரும் பேறுகள். அவை அன்பருக்கு ஒருமுறை அனுபவிக்க வரும்.*

“பூரண யோக வாயில்கள்” என்ற தலைப்பில் 114 அம்சங்களைக் குறிப்பிட்டு ஒருபக்கக் கட்டுரை 40 எழுதியுள்ளேன். மீதி 74 கட்டுரைகளும் எழுத வேண்டும். இவை எதிர்காலத்தில் மலர்ந்த



ஜீவியத்தில் வெளிவரும். ஓர் அன்பருக்கு இந்த 114 அம்சங்களில் ஒன்று பலித்திருந்தால் அவருக்கு யோகத் தகுதியுண்டு. 100க்கு மேற்பட்ட அன்பர்கள் இத்தகுதி பெற்றவர்என்பது என் அனுபவம்.

அவர்களில் ஒருவர் ***The Life Divine***இல் உள்ள 47+54 இடங்களை (பிரம்மத்தை சுட்டும் இடங்களை) எடுத்துப் பயின்று மனதிலிருத்த முயன்றால், அது பலிப்பது

**பிரம்மரிஷியாவதாகும்.**

அந்த சித்தியில் பல கட்டங்களுண்டு. மனம், உயிர், உடல் என்ற நிலைகளில் பலிக்கும். ஒவ்வொரு நிலைக்கும் இரு பகுதிகளுண்டு. எனவே 6கட்ட சித்திகள் எனலாம். ஆத்மாவையும் சேர்த்தால் ஆத்மாவுக்கு இரு பகுதிகளில்லை (ஜீவியம், பொருள்) 7 கட்ட பிரம்ம சித்திகள் என இதைக் கூறலாம்.

1) சொல்வது புரிவது முதல்நிலை மனமாகும்.
2) புரிவதை மனம் ஏற்பது இரண்டாம்நிலை சித்தி.
3) ஜீவியம் ஏற்றதை, பொருள் அனுமதிப்பது அடுத்தநிலை.
4) பொருள் முழுமையாக ஏற்பது மனத்தில் சித்தி பூர்த்தியாவது.

இதைக் கடந்து உயிர், உடல், ஆத்மாவுக்குரிய சித்தியின் நிலைகள் உள்ளன. ஒருவர் ***The Life Divine***ஐப் படித்து மேற்சொன்ன 4 நிலைகளில் பிரம்மத்தை அறிந்து, புரிந்து, ஏற்று, சித்தி பெறுவாரானால், *அவர் பிரம்மரிஷி பட்டத்திற்கு உரியவராவார். அப்படிப்பட்ட 6பேர் ஆசிரமத்திலிருந்ததாகப் பகவான் கூறியுள்ளார்.* உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்என்ற நூலிலும், மற்றும் பல இடங்களிலும் அன்பர் தெய்வத்திற்குரிய செல்வத்தைப் பேர் அளவில் பெறலாம்என நான் கொஞ்ச நாளாக எழுதி வருகிறேன். அதைப் பெறும் 51 முறைகளையும், அதற்குரிய சட்டங்கள் 42ஐயும் “அமிர்தமான அபரிமிதம்” என்ற கட்டுரையில் எழுதியிருக்கிறேன். வரும் ஆண்டுகளில் சூழல் அனுமதித்தால் அதை “மலர்ந்த ஜீவிய”த்தில் வெளியிடலாம்எனக் கருதுகிறேன். அது வெளி வருவதற்குள் இக்கட்டுரையைப் படிப்பவர்கள் பிரம்மத்தின் பரிசாக,

ஸ்ரீஅரவிந்தபிரம்மத்தின் அபரிமிதமான வரமாகத் திரண்ட செல்வம் பெற விருப்பப்படுபவர்கள் இம்முயற்சியை மேற்கொள்ளலாம். பணம் சம்பாதிப்பது தவறுஎன்ற இலட்சியமுள்ளவர்க்கு இம்முறையோ, எந்த முறையோ உதவாது. பக்தியால் சம்பாதிக்கும் பணம் பவித்திரமானது. அது ஒரு யோகச் சாதனைஎன ஏற்பவருக்கு பலிக்கும் 51 முறைகளில் இது ஒன்றாகும்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரபஞ்சம் மனிதனாக உருவாகிறது. முதலில் உடலாகவும், பிறகு உணர்வாகவும், மனமாகவும் உருவெடுத்து முடிவில் ஆன்மாவாகிறது. அதையும் தாண்டிய நிலையில் ஆன்மா பிரகிருதியில் வெளிப்பட்டு பரமாத்மாவை அடையும் வழியைக் கோலுகிறது.

***பிரபஞ்சம் ஜீவாத்மா மூலம் பரமாத்மாவை அடைகிறது.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கணிதத்தில் (infinity) அனந்தத்தை அறிவது (intellect) அறிவில்லை. பரம்பொருள் சிந்தனைக்குரிய மனத்தைத் (thinking mind) தொடுவதால் ஏற்படுவது அது. அறிவின் பிரகாசம் Life Divineஐப் புரிந்து கொள்ளாது. சிந்திக்கும் மனம் அளவு கடந்து (infinite expansion) விசாலம் அடைந்தால் Life Divine புரியும்.

***ஆன்மீகத்திற்குரிய அறிவுப்பாணி.***



## இம்மாதச் செய்தி

**உலகில் உள்ள**

**எந்த நிலையையும் மீறி**

**ஆண்டவன் (தெய்வீகமனம்)**

**செயல்பட்டு வரம் தருவது வழக்கம்.**

## P.97 All thought can know or widest sight perceive

### எண்ணம் அறியக்கூடியதெல்லாம், பரந்த ஞானதிருஷ்டி காண்பதெல்லாம்

- ✡ எண்ணமும், திருஷ்டியும் அறிய முடியாததெல்லாம்,
- ✡ அரிது, கண்ணுக்குப் புலப்படாதது, தூரத்திலுள்ளது, வினோதமானது.
- ✡ அத்தனையும் நெஞ்சை நாடி வருகின்றன, ஆத்ம ஸ்பர்சம் தொடுகிறது.
- ✡ அவனுடைய சுபாவ வாயிலைத் தொட்டுத் தட்டுகிறது.
- ✡ மனத்தின் பரந்த இடத்தை நெருக்கி நிரப்பியது.
- ✡ ஆத்ம தவப்பயனின் தழலாக எழும் சாட்சி,
- ✡ அற்புதம் பிரவாகமாக எழும் அவசியம் தந்தன.
- ✡ புதியதாக அவனுள் பகுதியாக நுழைந்தவர்,
- ✡ ஆத்மாவின் பெருவாழ்வின் புனித மக்கள்.
- ✡ காலத்தின் கதி காட்சியாக நகர்வதன் பேர்உருவம்,
- ✡ புலனெனும் புனிதத்தின் அழகுமிகு ஜரிகை.
- ✡ நெருங்கிய உறவை அவரால் நிரப்பிக் கொண்டனர்.
- ✡ எண்ணத்தின் நெருங்கிய நண்பனாக உள்ளே வந்தனர்.
- ✡ அதுவே அவனது ஆத்மாவின் இயற்கையான சூழல்.
- ✡ தணியாத நெஞ்சம் ஆனந்தத்தை நாடும் அற்புத வீரன்.
- ✡ ஆத்மானந்தத்தின் முடிவற்ற சாம்ராஜ்யம்,
- ✡ சுமுகமான வீணைத் தந்தியின் எண்ணிலா ஸ்ருதி.
- ✡ அகன்று விரியும் பிரபஞ்ச பயணத்தை நாடும்,



- ✡ அனைத்தும் ஒன்றெனும் ஆழங்காணாத உணர்ச்சி.
- ✡ இதுவரை காணாத சிறப்பின் கீதம் வந்தது.
- ✡ சத்தியக் குகையுள் அது ஒளிந்து மறைந்தது.
- ✡ அனந்தனின் புறவீச்சு பெற்ற ஆனந்தம்,
- ✡ ஜீவன் கண்ட கனவும், சாதனையும் அங்குக் காணப்பட்டது.
- ✡ முடிவற்ற ஆச்சரிய அனுபவம் ஸ்பர்சித்த கோயில் மணி.
- ✡ அழகின் செல்வம் பாசமான தீவிரத்தின் மாறுபாடு.
- ✡ இறைவனின் அடிச்சுவடு கணீரென ஒலிக்கும்.
- ✡ காலத்தைக் கடந்த சொல் கண்ணுக்குப் புலப்படவில்லை.
- ✡ ஒரு சொல் தாங்கிவரும் ஓராயிரம் ஆண்டுகள்.
- ✡ எண்ணங்களை சுயம்பிரகாசமாக்கும் பேர்எண்ணம்.
- ✡ ஆத்ம சிறப்பின் தொகையைக் குறிக்கும் எண்.
- ✡ சமமில்லாத அனைத்தும் சமமான ஒன்றுடன்.
- ✡ அத்தனைச் சின்னங்களையும் விளக்கும் ஒரே சின்னம்.
- ✡ பிரம்மத்தின் அடையாளமான பிரம்மச் சின்னம்.
- ✡ அவனுள் அவை அறையறையாக நுழைந்தன.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சிறிய மனிதனுக்குப் பிரபஞ்சத்தை அனந்தன் அளிக்க முன் வந்தால், அனந்தனைத் தன் வாழ்வுள் சுருக்க மனிதன் முனைகிறான். தன்னைக் காப்பாற்றுவதே சரிஎன்பது அனந்தனுக்கும் மனிதனுக்கும் பொது.

*சிறியதைப் பெரியதாக்க பெரியது தேடி வந்தால்*
*சிறியது பெரியதைச் சிறியதாக்க முனைகிறது.*

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVIII. Mind and Supermind

Thus the depiecing is already there. Page No.165
The relation of form with form Para No.10
has already been founded.
It is as if they were separate beings.
The relation of will-of-being with will-of-being too has already been founded.
It is as if they are separate forces.
The relation of knowledge-of-being with knowledge-of-being also is founded.
It is as if they are separate consciousness.
It is yet only 'as if' for the divine soul is not deluded.

It is aware of all the phenomenon of being.
It keeps hold of its existence.
It does both in the reality of being.
It does not forfeit its unity.
It uses mind as a subordinate action of the infinite knowledge.



## 18. மனமும் சத்தியஜீவியமும்

துண்டாடுவது தொடங்கிவிட்டது.
ரூபத்திற்கு அடுத்த ரூபத்துடனுள்ள தொடர்பு ஏற்பட்டு நிலைநிறுத்தப்பட்டது.
அவை தனித்தனி ஜீவன்களாக இருப்பதைப் போன்ற அமைப்பிது.
ஜீவனின் உறுதி அடுத்த ஜீவனின் உறுதியுடன் கொள்ளும் தொடர்பும் ஏற்பாடாகி அடிப்படை வந்துள்ளது.
அவை தனிப்பட்ட சக்திகள்என்பது போன்ற அமைப்பு.
ஜீவனின் ஞானம் ஜீவனின் ஞானத்துடன் கொள்ளும் தொடர்பும் அதே போல் ஏற்பாடாயிற்று.
அவை தனித்தனி ஜீவியமாக இருப்பதைப் போன்ற அமைப்பு.
இவையனைத்தும் தெய்வீக ஆன்மா ஏமாறாது எனக் கொண்டு செய்தது போன்றதே.
தெய்வீக ஆன்மா ஜீவனின் எல்லாத் தோற்றங்களையும் அறியும்.
அது தன் வாழ்வைத் தன் பிடியில் கொண்டுள்ளது.
ஜீவனில் சத்தியத்தில் அது இவையிரண்டையும் செய்கிறது.
அது தன் ஐக்கியத்தை இழப்பதில்லை.
அனந்த ஞானத்திற்கு மனத்தை உபசெயலாக தெய்வீக ஆன்மா கொண்டுள்ளது.

It is a definition of things subordinate to its awareness of infinity.
It is a delimitation dependent on its awareness of essential totality.
It is not the apparent pluralistic totality of sum.
It is not a collective aggregation.
Both are only another phenomenon of Mind.
There is no real limitation.
The soul uses its defining power for the play.
It is a play of well distinguished forms and forces.
It is not used by that power.

A new factor is needed to create ignorance. Page No.166
It is a new action of conscious force. Para No.11
It can create a helplessly limited mind.

It is opposed to a freely limiting mind.
It is a mind subject to its own play.
It views it in its truth.
It is creature mind.
It is opposed to the divine mind.
The new factor is Avidya.
It is a self-ignoring faculty.
It separates action of Mind from the action of Supermind.
Supermind originated the Mind.
And still it governs the Mind from behind the veil.
Mind is thus separated.
It sees the particular and not the universal.
Or it conceives of the particular only.
It is in an unpossessed universal.



தெய்வீக ஆன்மாவின் அனந்த ஞானத்திற்குட்பட்ட விளக்கமிது.

தெய்வீக ஆன்மாவின் தன் முழுமையை அறியும் ஞானத்தின் அளவுக்குட்பட்டது.
பகுதிகள் சேர்ந்த முழுமை தோற்றம். இது அதுவன்று.
இது பொதுவான முழுமையன்று.
இவையிரண்டும் மனத்தின் மற்றொரு தோற்றம்.
அளவீடு என்பதில்லை.
தன் விளக்கும் திறனை ஆத்மா தன் லீலைக்குப் பயன்படுத்துகிறது.
ரூபங்களும், சக்திகளும் விவரமான லீலை அது.
இது சக்தியால் பயன்படுத்தப்படவில்லை.

அஞ்ஞானம் ஏற்பட ஒரு புது விஷயம் தேவை.
விழிப்பான சக்திக்கு - சித்-சக்தி - இது ஒரு புதுவேலை.
அளவுக்குட்பட்ட மனத்தை - தெம்பில்லாத மனத்தை - அது சிருஷ்டிக்கலாம்.
மனம் தானே தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது இதற்கு எதிரானது.
மனம் தன் செயலைத் தானே கட்டுப்படுத்தும் நிலையிது.
தன் சத்தியத்தின் கண்ணோட்டத்திலிருந்து அது பார்க்கிறது.
அது மனித மனம்.
அது தெய்வீக மனத்திற்கு எதிரானது.
புது விஷயம்என நாம் கூறுவது அவித்தை.
தன்னையே மறக்கும் குணம் அது.
மனத்தின் செயலை சத்தியஜீவியத்தின் செயலிலிருந்து அது பிரிக்கும்.
மனம் சத்தியஜீவியத்திலிருந்து பிறந்தது.
இருந்தாலும் அது மனத்தைத் திரையின் பின்னாலிருந்து நடத்தும்.
மனம் அப்படிப் பிரிகிறது.
குறிப்பிட்டதை அது காணும். பொதுவானதை அதனால் காண முடியாது.
அல்லது குறிப்பிட்டதை மட்டுமே அதனால் நினைக்க முடியும்.
பிரபஞ்சம் தன் ஆட்சிக்குள் அதைக் கொண்டு வாராத நிலை.

It is no longer both particular and universal.
Both are phenomenon of the Infinite.
Thus we have the limited mind.
It views every phenomenon as a thing in itself.
To it, it is a separate part of a whole.
It enlarges always its aggregates.
It does so without getting back to the sense of unity.

Mind is an action of the Infinite. Page No.166
Mind depieces, as well as aggregates. Para No.12
It does so ad infinitum.
It cuts up being into wholes.
It cuts them into even smaller wholes.
It reduces them into atoms.
Those atoms are divided into primal atoms.
It does so until it would dissolve the primal atom.
It would, if it could.
Then the primal atom would disappear into nothingness.

But, it cannot.
Because behind this dividing action is a saving knowledge.
It is of the supramental.
The supramental knows every whole.
It knows every atom to be only a construction of all-force.
It is a construction of all consciousness, of all being.
It constructs them into phenomenal forms of itself.
The aggregate can be dissolved.
It dissolves into infinite nothingness.
Mind seems to arrive at it.
It is to Supermind only returning to itself.



அது குறிப்பிட்டதும், பொதுவானதுமான இரண்டுமன்று.
இரண்டும் அனந்தத்தின் தோற்றமே.
இவ்வழி குறுகிய மனம் பிறக்கிறது.
எதையும் இம்மனம் அதுவே முடிவானதுஎனக் கொள்கிறது.
அம்மனத்திற்கு அது முழுமையின் பகுதி.
அதன் தொகுப்பை எப்பொழுதும் பெரிதுபடுத்தும்.
மீண்டும் ஐக்கியத்தையடையாமல் மனம் இப்படிச் செயல்படுகிறது.

மனம் அனந்தத்தின் செயல்.
மனம் துண்டு செய்து சேர்க்கிறது.
அதை முடிவில்லாமல் செய்கிறது.
ஜீவனைப் பல முழுப்பகுதிகளாகத் துண்டு செய்கிறது.
அவற்றை மீண்டும் மிகச் சிறிய துண்டுகளாகச் செய்கிறது.
அவற்றை அணுக்களாக்குகிறது.
அவ்வணுக்களை அணுக்களின் மூலமாகத் துணிக்கிறது.
சிறுதுளிகள் கரையும்வரை பிரிவினைத் தொடர்கிறது.
முடிந்தால் கரைக்கும்.
அப்பொழுது அணுக்களின்மூலம் ஒன்றுமில்லாமல் போகும்வரை
பிரிவினைத் தொடர்கிறது.
அதனால் அதைச் செய்ய முடியாது.
இந்தப் பிரிவினைக்குப்பின் ஒரு ஞானம் உண்டு.
அது சத்தியஜீவியம்.
சத்தியஜீவியத்திற்கு எல்லாமுழுமையும் தெரியும்.
ஒவ்வோர் அணுவும் சக்தியின் கட்டமைப்புஎன அது அறியும்.
அது ஜீவியம் தந்த அமைப்பு, ஜீவன் தந்தது.
சத்தியஜீவியம் அவற்றைத் தோற்றத்திற்குரிய ரூபமாக்குகிறது.
தொகுப்பு கரையலாம்.
அனந்தமான சூன்யமாக அது கரையும்.
மனம் இந்த முடிவுக்கு வருகிறது.
இது சத்தியஜீவியம் மீண்டும் தன்னையடைவது.

It returns to the self-concentrating conscious-being.
It returns out of its phenomenon.
It returns into its infinite existence.
The consciousness may proceed in whichever way.
It can be by the way of infinite division.
Or it may be by infinite enlargement.
Either way it arrives only at itself.
It arrives at its own infinite unity and eternal being.

Mind can consciously subordinate its action to this knowledge of the Supermind.
Then the truth of the process is known to it.
That truth is not at all ignored.
There is no real division.
There is only infinitely multiple concentration into forms of being.
It is an arrangement of the relation of those forms of being to each other.
In this division is a subordinate appearance of the whole process.
It is necessary to the spatial and temporal play.
You can divide as you will.
You can get down to the most infinitesimal atom.
Or it may be to form the most monstrous possible aggregate of worlds and systems.
You cannot get by either process to a thing-in-itself.
All are forms of a Force.
It alone is real in itself.
The rest are real only as self-imagings.
Or the rest are manifesting self-forms.



தன்னையறியும் ஜீவனின் நிஷ்டைக்கு அது திரும்புகிறது.
அது தோற்றத்திலிருந்து திரும்புகிறது.
அது தன் அனந்த வாழ்வுக்குத் திரும்புகிறது.
ஜீவியம் எவ்வழியும் செல்லும்.
அது அனந்தமான பிரிவினையாகலாம்.
அது அனந்தமாகப் பெருகலாம்.
எப்படியும் அது தன்னையே நாடுகிறது.
தன் அனந்த ஐக்கியத்திற்கும், காலம் கடந்த ஜீவனுக்குமே அது திரும்பி வருகிறது.
மனம் தன் செயலை விரும்பி உட்படுத்திக் கொள்ளும். சத்தியஜீவிய ஞானத்திற்குட்படுத்திக் கொள்ளும்.
முறையின்சத்தியம் தெரிந்துவிடும்.
அந்த சத்தியத்தைப் புறக்கணிக்க முடியாது.
உண்மையில் பிரிவினை என்பதில்லை.
அனந்தமான பல ஜீவனின் ரூபங்கள் செறிந்துள்ளன.

அந்த ஜீவனின் ரூபங்களுக்குள்ள ஏற்பாடு.

இப்பிரிவினையில் இந்த முழு முறைக்குரிய உப ஏற்பாடுண்டு.

காலத்திலும், இடத்திலும் லீலை செய்ய இது அவசியம்.
முடிந்தவரைப் பிரிக்கலாம்.
துச்சம்என்று கூறும் அணு வரையில் பிரிக்கலாம்.
பூதாகரமானத் தொகுப்பு அல்லது அமைப்பாக இருக்கலாம்.

எந்த வழியிலும் ஒரு முடிவான நிலைக்கு வர முடியாது.
அனைத்தும் சக்தியின் ரூபங்களே.
அது மட்டுமே சத்தியம்.
மற்றவை சுயபிம்பம்என்ற அளவில் உண்மையாகும்.
அல்லது மற்றவை வெளிப்படும் சுயரூபங்களாகும்.

They are the self-forms of the eternal Force - Consciousness.

*Contd....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

புலன்வழி செல்லும் சக்தியை நிறுத்தி, சுத்தம் செய்து ஞானயோகமும், ராஜயோகமும் செயல்படுகின்றன. அப்படிக் குவியும் ஏராளமான சக்தி, தூய மனத்தை, தூய ஆன்மாவை நாடச் செய்கிறது.

பூரணமான தியான நிலை, முழுமையான விழிப்பு, அகந்தை அழிதல், பூரணயோகத்தின் அடிப்படை. இவை அனைத்துக்கும் பூரணம் உண்டு.

நமக்கு முன்னுள்ள நிலையில் செயல்படாவிட்டால், விரயம் தவிர்க்கப்படும். இதனால் நாம் உள்ள நிலையில் நிறைவு சேரும். அதுபோல் சேர்ந்த சக்தியை தூய்மைப்படுத்தினால் நிறைவு வளம்பெறும். அதற்குச் சமர்ப்பணமும், சரணாகதியும் உதவும். நிறைவு செறிந்து வளம் பெற்றால் அடுத்த நிலையை எய்த உதவும்.

***நிறைவு, வளம், தீவிரஆர்வம் ஆகியவை***
***பூரணயோகத்தின் பகுதிகள்.***
***தூயமனம் தூயஆன்மாவை அடைகிறது.***



நித்தியமான சித்-சக்தியின் சுயரூபங்களாகும்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இதுவே மனிதனின் பங்கு. அதை அவன் செய்வதில்லை. செய்ய முன்வந்தால் திணறுகிறான். அன்னை இங்கும் உதவுகிறார். அன்னையை அழைத்தால், அழைப்பில் நிறைவு, வளம், தீவிரம் கலந்துள்ளன. அழைப்பு யோகத்தைத் தன்னுள் அடக்கியது. இது மேலெழுந்த மனத்திலிருந்து எழுவது. அகந்தையை மீறி எழ வேண்டியிருப்பதால் முயற்சி தேவைப்படுகிறது. அழைப்பு கனிந்து, உள்ளே ஆழத்திற்குச் சென்று, அங்கிருந்து தானே மெதுவாக எழும். அது முழுமையான அழைப்பு, உயர்ந்த சமர்ப்பணம். அதன் தீவிரத்தால் அது சத்தியஜீவியமாகிறது. தீவிரம் அதிகம் ஆகும்பொழுது உள்மனம், சூட்சுமமனம், அடி மனம், ஆழ்ந்தமனம் ஆகியவற்றை அது எட்டுகிறது.

வேறு வகையாகச் சொன்னால், மேலிருந்து உள்ளே சைத்திய புருஷனை நாடிச்சென்று, அங்கிருந்து உயர்ந்து ஆன்மீக நிலைகளை எட்டுகிறது.

அதையே மனம், உணர்வு, உடல் எனவும் சொல்லலாம். ஒவ்வொரு நிலைக்குரிய ஜீவியத்திற்கும் பொருள் உண்டு. எனவே, உடலின் பொருள் (substance) கடைசி நிலை ஆகும்.

ஒவ்வொரு நிலையிலும் முதல் நிலையின் சிரமம் சற்று அதிகமாகும். Agendaவில் அன்னை உடலின் ஜீவியத்தி-லிருந்து, உடலின் பொருளைத் தாம் அடைந்ததை விவரிக்கின்றார்.

***அழைப்பு கனிந்து ஆழம் நாடுவது முழுமையான அழைப்பு.***

# கார் கம்பெனியில் நிகழ்ந்த அற்புதம்

என். அசோகன்

1972ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருக்கின்ற ஆட்டோமொபைல் உற்பத்தி செய்யும் கம்பெனிகளில் மூன்றாவது இடத்தில் இருந்த கிரைஸ்லர் கார் கம்பெனி 1700 மில்லியன் (1700 கோடி ரூபாய்) டாலர்கள் கடன் வாங்கி இருந்தது. உலகத்திலேயே தொழில் ரீதியாக இந்தக் கடன்தான் அந்த ஆண்டில் அதிகபட்சமாக இருந்தது. ஏறக்குறைய 400 வங்கிகளிலிருந்து கடன் வாங்கி இருந்தார்கள். வங்கியில் அவர்களுடைய சேமிப்பு 10 லட்சம் டாலர்கள் மட்டும்தான் இருந்தது. ஆனால் அவர்களுடைய தினசரி சராசரி செலவுகளோ 8 கோடி டாலர்கள் அளவுக்கு இருந்தது. ஆட்டோமொபைல் தொழிலில் இருந்த வல்லுநர்கள், பங்கு மார்க்கெட் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பத்திரிகைகள் என எல்லோருமே கம்பெனியை இழுத்து மூடுவது தவிர்க்க முடியாதது என்று கூறிவிட்டார்கள். ஓர் இடத்திலிருந்துகூட நம்பிக்கையூட்டும்படியான குரல் எழவில்லை. இந்நேரத்தில் ஐயகோக்கா (Iacocca) என்பவர் இக்கம்பெனியின் தலைமைப் பதவியை ஏற்றார். அவருக்கு அக்கம்பெனி வழங்க முன்வந்த ஆண்டுச்சம்பளம் 10 லட்சம் டாலராகும். இருந்தாலும் இக்கம்பெனி பற்றிய முழு உண்மை தெரிந்திருந்தால் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கமாட்டேன் என்று அந்நேரம் அவர் பேசினார்.

ஊழியர்கள் வேலை செய்யவில்லை. கம்பெனியின் நிதி நிலைமைக்குப் பொறுப்பேற்று இருந்த அதிகாரியால் (Chief Financial Officer) அங்கு இருந்த நிதி நிலைமையைப்பற்றி எதுவுமே பேச முடியவில்லை. வேலை நடக்குமிடத்தில் கொலை, கற்பழிப்பு, சூதாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. இத்தகைய சூழ்நிலையில் சேர்மனாக வந்த ஐயகோக்கா சவாலை ஏற்றுக் கொண்டு கம்பெனி சிரமத்திலிருந்து மீளும்வரையிலும் மிகக் குறைந்த சம்பளம் வாங்கப்போவதாக அறிவித்தார். ஒத்துழைக்காத, பிடிவாதம் செய்த வங்கிகளைக் காத்திருக்கச் சொன்னார். எதிர்ப்புத் தெரிவித்த



ஊழியர்களின் சம்பளத்தைக் குறைத்தார். கம்பெனியில் இருந்த 35 துணைத் தலைவர்களில் (Vice-President) 34 பேரை பதவி நீக்கம் செய்தார். புதிய மாடல்கார் ஒன்றை உருவாக்கினார். ஆட்டோமொபைல் துறையில் அந்நேரம் எந்தக் கம்பெனியும் வழங்க முன்வாராத, ‘பணத்தைத் திருப்பித் தரும் கேரன்டி’யை (money back guarantee) வழங்கினார். தாமே டி.வி. விளம்பரங்களில் தோன்றி அக்காரை விற்க முயன்றார். இம்முயற்சிகளின் பலனாக மூன்றே ஆண்டுகளில் கம்பெனிக்கு இருந்த கடன்போன்று இரட்டிப்புத் தொகையைச் சம்பாதித்துக் காட்டினார். அமெரிக்க அரசாங்கம் வழங்கியிருந்த பத்து ஆண்டு ‘கேரன்டி’யை மூன்றே ஆண்டுகளில் விடுவித்தார். இவற்றிற்கெல்லாம் பரிசாக அவருக்கு ஊதியமாகவும், போனஸாகவும், பங்குகளாகவும் 2 கோடி டாலர் அளவிற்கு வருமானம் கிடைத்தது.

நம்பிக்கையற்றுப்போன ஒரு சூழ்நிலையைப் பொறுப்புணர்வோடு ஏற்றுக்கொள்வது, ஓர் ஆன்மீகச் செயல்பாடாகும். தைரியம், தியாக மனப்பான்மை, மனோதிடம், இவையெல்லாம் ஆன்மீகக் குணங்களாகும். எந்த நிறுவனத்தில் இக்குணங்கள் வெளிப்படுகின்றனவோ அந்த நிறுவனத்தின் ஆன்மா இத்தகைய குணங்களைப் பாராட்டி, எது சில ஆண்டுகளுக்குமுன் முடியாதுஎன்று தெரிந்ததோ அதை முடித்துக் கொடுக்கிறது. ஐயகோக்கா ஆன்மாவின் சக்தியை இயற்பொருள் ரீதியாக (physical level) வெளிப்படச் செய்தார்.

- ✡ பழைய முறைகளை நம்பாமலிருப்பது.
- ✡ கண்ணுக்குத் தெரியாத நம் அறிவைத் தாண்டிய விஷயங்களைப் பூரணமாக நம்புவது.
- ✡ இதுவரையில் நம்மிடமில்லாத ஓர் உள்மன அமைதியைக் கொண்டு வருவது.
- ✡ மேற்கண்ட இவை மூன்றும் ஆன்மாவின் சக்தியைச் செயல்பட வைக்கும் வழிமுறைகளில் சிலவாகும்.

இந்தியாவைத் தொழில்மயமாக்கும் ஆரம்ப நாள்களில் சில குறிப்பிட்ட துறைகளில் அரசாங்கமே முழு முதலையும் கொடுக்க முன் வந்தபோதுகூட அலுமினியம் தயாரிக்கும் தொழிற்சாலைபோன்ற

திட்டங்களை மேற்கொள்ள எந்த ஒரு தொழிலதிபரையுமே ஊக்குவிக்க முடியாத நிலையில் நம் நாட்டு அரசாங்கம் இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நூறு கோடி முதலீட்டில் உரம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது. மூன்று ஆண்டுகள் கழித்து மார்க்கெட்டில் வந்த சரிவினால் ஏற்பட்ட சூழ்நிலை, முதலீட்டாளர்களுக்கு எதிராகப் போய்விட்டது. நிலைமை இன்னும் சில காலம் நீடித்தால் இந்த நூறு கோடி ரூபாய் முதலீடும் கரைந்து போய்விடக்கூடிய அபாயம் ஏற்பட்டது. அங்கிருந்த ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கும் நூறு பேரளவில் இருந்த அதிகாரிகளுக்கும் வேலை பறிபோகக்கூடிய ஆபத்து வந்தது. இத்தகைய சூழ்நிலையில் அக்கம்பெனியின் உரிமையாளர் தம்முடைய வெளிச் செயல்பாடுகளில் ஓர் அமைதியை வெளிப்படுத்தினார். இந்த ஆன்மீக அமைதிக்கு வாழ்க்கை நல்ல விதமாகப் பதிலளித்தது. மார்க்கெட்டும் மீண்டும் சாதகமாக மாறியது. இப்பொழுது இந்த உரக் கம்பெனி இந்தியத் தொழில் துறையில் ஒரு சிகரமாக விளங்குகிறது.

எவர்களுக்கெல்லாம் பரிசுத்தமான மற்றும் எளிமையான ஆன்மீக நம்பிக்கை இருக்கிறதோ, அவர்கள் எல்லோரும் ஆன்மாவின் சக்தியை வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் செயல்பட வைக்கலாம்.

வாழ்க்கைஎன்பது வெற்றியும், தோல்வியும் நிறைந்த ஒரு சூழலாகும். இத்தகைய சூழலில் தவறாமல் வெற்றி பெறும் வலிமை ஆன்மாவிற்கு மட்டுமுண்டு. அத்தகைய ஆன்மீக சக்தியைச் செயல்பட வைப்பது உண்மையும் நம்பிக்கையுமாகும்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பூரணம் மேல்மனதிலில்லை. விட்டுக் கொடுத்து சுமுகம் பெறுவதே அதற்குள்ளது.



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**944) "உலகம் உள்ளேயிருக்கும் பொழுது தனிமை ஏது?" என்றும் உடல் தனித்திருக்கலாம், ஜீவன் எப்பொழுதும் தனித்திருக்காது. தனிமை ஆன்மீக நெருக்கத்தை அதிகப்படுத்தும்.**

***உலகம் உள்ளேயுள்ளபொழுது தனிமைக்கு வழியில்லை.***

- ✡ புறம்என்பது உலகமில்லை, புலன் காண்பது.
- ✡ அகம்என்பது உலகம், அதனுள் பிரபஞ்சமும் உள்ளது.
- ✡ புலன் காண்பது பிம்பம் போன்றது.
- ✡ பிம்பமில்லாவிட்டால் நாமில்லைஎனப் பொருளில்லை. நாம் உண்மை. பிம்பம் உண்மையில்லை.
- ✡ ஒரு நாள் பகவான், ‘‘நான் ரிஷபசந்த் என்ன செய்கிறார் எனப் பார்க்கிறேன்’’ என்றார். எவரையும் பகவான் தம் மனத்துள் காண்பார்.
- ✡ சினிமாவில் உள்ளதுபோல் திரையில் உலகம் கண் முன்னே நகரும்என்கிறார்.
- ✡ உள்ளே உலகம் மட்டுமன்று, பிரம்மமும் இருக்கிறது.
- ✡ ரிஷி ஞான திருஷ்டியில் காண்பது காலத்தைக் கடந்த நிலை.
- ✡ சத்தியஜீவியம் திரிகால திருஷ்டியைக் காண்பது மூன்றாம் நிலைக் காலம்.
- ✡ மனிதன் அகந்தை உள்ளவன்.
- ✡ அகந்தை அழிந்தால், புருஷன் வெளிப்படுவான்.
- ✡ அது பிரபஞ்சத்திற்குரிய புருஷன்.
- ✡ பிரபஞ்ச அனுபவத்தை ஒருவர் பெறச்செய்வது தனி மனித ஆத்மா உருவாவது.
- ✡ பிரபஞ்ச அனுபவத்தை உள்ளே காணலாம்.

- ✡ அதன் புருஷன் பிரம்மம்.
- ✡ மனிதனுக்கு 3 அம்சங்களுண்டு.
- ✡ மனிதன், உலகம், பிரம்மம் ஆகியவை அவை.
- ✡ ஐக்கியம்என்பது ஜீவன்.
- ✡ மனிதன்என்பது ஜீவனுடைய சக்தி.
- ✡ உலகை உள்ளே காண்பது ஆன்மீக சித்தி.
- ✡ கிருஷ்ணன்குழந்தை வாயினுள் உலகம் தாயாருக்குத் தெரிந்தது.
- ✡ சாதாரண மனிதருக்கும் சில சமயங்களில் தெரிவதுண்டு.
- ✡ ஒரு பெரிய கூட்டத்தில் நாம் விரும்புபவர் - எந்த நேரமும் மனதிலுள்ளவர் - இருந்தால், அது உணர்வில் தெரியும்.
- ✡ நமக்கு வேண்டியவர்கட்கு நடப்பது கனவில் தெரியும்.
- ✡ சத்தியஜீவியம் பெற்றவர்க்கு உலகம் முழுவதும் உள்ளே தெரியும்.
- ✡ அன்னை தம் உடல் பிரபஞ்சம் முழுவதும் பரவியதுஎனக் கூறினார்.
- ✡ ஆன்மீகம்என்பது தனிமை.
- ✡ உலகம் முழுவதும் உள்ளேயுள்ளபொழுது தனிமை ஏது?
- ✡ உள்ளே காண்பது சூட்சுமவாழ்வு.
- ✡ புறத்தில் காண்பது ஜடவாழ்வு.
- ✡ 1959 முதல் அன்னை பகவானை சூட்சுமஉலகில் கண்டார்.
- ✡ ஒரு சாதகிக்கு அக்கி வந்து, எந்த மருந்திற்கும் குணமாக-வில்லை.

  அன்னையிடம் கூறினார்.

  அன்னை அவருடைய குரு, காலமானவரை அழைத்தார்.

  அன்னை அவரை விசாரித்தார்.

  "பாசம் அவளுக்கு வலி தருகிறது" என்றார் குரு.
- ✡ நம் வாழ்வை சற்றுக் கூர்ந்து கவனித்தால், நம்மைச் சார்ந்தவர் செய்கையும் நாமும் கலந்திருப்பது தெரியும்.



- ✡ பொதுவாக நாம் எழுதும் கடிதம் போய்ச் சேருமுன் அவரிடமிருந்து கடிதம் வருவதுண்டு (letters cross in the post).

  நமக்கும் அவருக்கும் எண்ணம் ஒன்றுபோல இருப்பதால் இது நடக்கிறது.
- ✡ டிசம்பர் 4ஆம் தேதி 1950இல் சுதந்திரப் போராட்ட வீரர் கனவில் சேலத்தில் பகவான் தோன்றினார்.

  5ஆம் தேதி காலை ரேடியோ அவர் சமாதியானதைத் தெரிவித்தது.

  அவர் புதுவை வந்து தரிசனம் செய்தார்.
- ✡ புதுவை கவர்னர் கனவில் பகவான் தோன்றி, "ஏன் என்னை வந்து பார்ப்பதில்லை?" என்றார்.
- ✡ அதிலிருந்து கவர்னர் ஞாயிறன்று சமாதிக்கு வரும் வழக்கத்தை மேற்கொண்டார்.

❀ ❀ ❀

**945) எந்தக் கட்டுப்பாடும் அதனளவில் நிறைவேறாவிட்டால் பலன் தாராது. யோகம்என்பது உயர்ந்த வாழ்வு. கட்டுப்பாடு அதன் ஆரம்பம்.**

***செயல் அறிவுக்குக் கட்டுப்படுவது யோக வாழ்வின் முதற்படி.***

- ✡ உலகில் பல பெரிய இலட்சியங்கள் உள்ளன.
- ✡ அவற்றுள் தலையாய இலட்சியம் ஆண்டவனைத் தேடுவது என்கிறார் பகவான்.
- ✡ ஜடமான மண்பிண்டத்தை மனிதனாக்குவது கட்டுப்பாடு.
- ✡ கட்டுப்பாடின்றி வாழ்வில்லை.
- ✡ நாகரீகமடைவதன்முன் வேட்டையாடிப் பிழைத்தவன் உறங்கும் பொழுது தன் உடலைக் காட்டு விலங்குகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள உஷாராக இல்லாவிட்டால் உயிருடன் இருக்க முடியாது.

**உஷார், உணர்வின்கட்டுப்பாடு.**

✡ ஆண்டவனையடைய உதவுவது தவம், யோகம்.

✡ உடலைச் சுத்தம்செய்து, குந்தளினியை விடுவித்து, சகஸ்ரதளம் மூலமாக மோட்சம் பெறுவது ஹடயோகம்.

செயலைத் தூய்மைப்படுத்தி, அதே முறையில் மோட்சம் பெறுவது கர்மயோகம்.

பக்தியோகம், உணர்வின் தூய்மையாலும், செறிவாலும், வலிமையாலும் மோட்சமடைகிறது.

ஞானயோகம் அறிவைக் கருவியாக்கி மோட்சம் பெறுகிறது.

கீதையின்யோகம் அதைக் கடந்தது. அதன் கருவி சரணாகதி.

✡ ஜீவனை அடைபவன் ஜீவன்முக்தன். அது முதல் நிலை மோட்சம்.

ஆத்மா, புருஷா, புருஷோத்தமா, ஈஸ்வரா, பரமாத்மா, பரபுருஷா, பரமேஸ்வராஎன்பவை இறைவனுக்குரிய பல நிலைகள்.

யோகத்தின் நிலைகள் பல.

புருஷனின் நிலைகள் பல.

மோட்சத்தின் நிலைகள் பல.

மனித முயற்சியடையும் பலன் அவனையும், அவன் கருவியையும், முறையையும் பொருத்தது.

✡ இவையனைத்தும் ஆத்மாவின் சுயநலம், ஆண்டவன் திருவுள்ளம் இல்லை என்கிறார் பகவான்.

✡ *இறைவன் இகஉலகில் இன்பமயமாய் உருவம் பெற்று, ஜீவன் ஜீவனோடு கலந்து, ஜீவியம் ஜீவியத்துடன் இணைந்து, ஆனந்தம் ஆனந்தத்தை அனந்தமாக்கும் லீலை - அற்புதம் - இறைவன் திருவுள்ளம்என்கிறார் பகவான்.*

✡ அதைச் செய்வது புருஷோத்தமனோ, அக்ஷரபுருஷனோ இல்லை, முழுமையாக பிரம்மம்.

✡ முழுமையான பிரம்மம் உலகில் தன்னைத் தன்னுள் ஒளித்து - அஞ்ஞானத்தை உற்பத்தி செய்து - அதனினின்று



வெளிவரும் ஆனந்தத்தை அனுபவிக்க ஏற்பட்டது சிருஷ்டி.

**அதைச் செய்வது பூரணயோகம்.**

**அதன் கருவி முழுமையான சரணாகதி.**

✡ சத்தியஜீவியம் உலகில் இறங்கி வந்து அற்புதமாக மாறுவது முதற்கட்டமானால், அது பகவான் ஸ்ரீ அரவிந்த அவதாரமானால், அதற்கு முன்கட்டம் கிருஷ்ணாவதாரம்.

அதற்கும்முன் உள்ள நிலை யோகிக்குரியது.

ஞான திருஷ்டியுள்ள ரிஷி அதற்கும் முந்தையவர்.

தவம் செய்து மௌனம் பூண்ட முனி முதற்கட்டத்திற்குரியவர்.

**இலட்சியமான நல்ல மனிதன் அடுத்த கட்டம்.**

**இலட்சியம், திறமை, இனிமையுடைய மனிதன் இப்பெரு நெறிக்கு ஆரம்ப வாயில்.**

✡ அவனுக்குரியது கட்டுப்பாடு.

எண்ணம் கட்டுப்பட்டு,

உணர்ச்சி கட்டுப்பட்டு,

செயலும் கட்டுப்பட்டால்

வாழ்வு கட்டுப்படும்.

கட்டுப்பட்ட வாழ்வு உயர்ந்து தெய்வீக வாழ்வாகும்.

✡ கட்டுப்பாடு அதனளவில் நிறைவேறலாம். அது அதற்குரிய பலன் தரும்.

முழுக் கட்டுப்பாடு, எல்லாக் கரணங்களும் கட்டுப்படுவது, யோகம் ஆரம்பிக்க வேண்டிய முதல்நிலை.

❀ ❀ ❀

**946) சரித்திரத்திலும் குடும்பத்திலும் பெருஞ்சாதனைகட்குப்பின் பெருங்கொடுமைகளும், அவற்றைப் பொறுத்துக்கொண்ட தியாகங்களும் நிறைந்துள்ளன. கஷ்டங்களைப் பட்டவர் அவற்றைப் பொருட்படுத்தாமல் அந்தச் சாதனைகளைப் போற்றுவதே வாழ்வின் சூட்சுமஇரகஸ்யம். இதை மக்களின் ஒத்துழைப்பு, தியாகம் என்கிறோம். எந்தக் குடும்பம் அல்லது நாடு**

**இந்த நோக்கத்தை விரும்பி ஏற்கிறதோ அவர்கள் எந்த உயர்வையும் எட்டலாம்.**

***கொடுமையைப் புறக்கணித்துப் போற்றிய சாதனையே சாதனை.***

- ✡ சாதனையும் கொடுமையும் சேர்ந்திருப்பதைக் காணலாம்.
- ✡ கொடுமையில்லாத சாதனையில்லை.
- ✡ சாதனையில்லாத கொடுமையுண்டு.
- ✡ கொடுமையில்லாத சாதனையும் உண்டு.
- ✡ விரதமும் தவமும்போல, கொடுமையும் சாதனையும் சேர்ந்துள்ளன.
- ✡ இருளான சூழலில் கொடுமையைத் தவிர்த்து சாதிக்க முடியாது.
- ✡ ஒளிமயமான சூழலில் சாதனைக்குத் திறமை போதும், கொடுமை தேவையில்லை.
- ✡ இருண்ட சூழலில் திறமை, கொடுமைமூலம் வருகிறது.
- ✡ திறமை சக்தியின் திண்மை.
- ✡ இயற்கையில் செயல்படும்வரை கொடுமை அவசியம்.
- ✡ ஜீவனுக்கு மாறிவிட்டால் கொடுமை அவசியமில்லை.
- ✡ அன்பனுக்கு இயற்கை தேவையில்லை, ஜீவனிலிருந்து செயல்படும் உரிமையுண்டு.
- ✡ நேரம் வரும்பொழுது அன்பனின் முடிவு முக்கியமாகும்.
- ✡ மேல்மனத்தில் முடிவு எளிது.
- ✡ ஆழத்தில் முடிவு சிரமம்.
- ✡ அடிமனத்தின் முடிவு கொடுமையை விலக்கும்.
- ✡ ஒளியைத் தருவது பண்பு, கொடுமையை அவசியமாக்குவது பொய்.

**நான்கு பெண்கள்**

அயலா, லூசி என்ற இரு பெண்கள் பணமும் பண்பும் உள்ள குடும்பத்தில் பிறந்து, செல்லமாக வளர்க்கப்பட்டு, பண்பால்



செப்பனிடப்பட்டவர். தாய் இறந்துவிடுகிறார். பிறகு தகப்பனாரும் இறந்துவிடுகிறார். லூசி பெரியவள். அவளை சித்தி அழைத்துக் கொள்கிறாள். அயலா சிறியவள். தாய்மாமன் அழைத்துப் போகிறார். சித்தி புருஷன் வசதியற்ற குமாஸ்தா. தாய்மாமன் கோடீஸ்வரன். சித்திக்குக் குழந்தைகளில்லை. கோடீஸ்வரனுக்கு ஒரு மகனும் இரு பெண்களும் உள்ளனர். தாய்மாமன் பெரும்பணக்காரன், புதுப் பணக்காரன். அவன் மகன் தெளிவற்ற நல்ல குணம் படைத்தவன். எந்தக் குறையுமில்லை. ஆனால் மனம் அயலா, லூசி அளவுக்கு வளரவில்லை. தாய்மாமன் மகள் இருவர். பெரியவள் தன்னைக் கெட்டிக்காரியென நினைப்பவள். பிறர் உயர்வை அவள் மனம் ஏற்காது. சிறியவளுக்கு அந்தக் குறையில்லை. ஆனால் அந்தநேரம் எது ஆதாயமோ அதை வெட்கமின்றி செய்துவிடுவாள். பெரியவள் அந்தஸ்திற்கு ஆசைப்பட்டு வருமானமில்லாத பிரபுவின் 40 வயதான மகன் M.P.யைக் கட்டிக் கொண்டு, சீதனமாக £120,000 பெறுகிறாள். சிறியவள் அதே பணம் தனக்கும் கிடைக்கும் என வருமானமற்ற (gentleman) நல்லவரை மணக்க சம்மதித்து, தகப்பனாரை அணுகி பணம் கேட்கச் சொல்கிறாள். தகப்பனார் மட்டமாகப் பேசுவதால், 'பணம் வேண்டாம்' என அவர் விலகியபோது, "நாம் ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டால் பணம் வரும்" என்று வரனை அழைக்கிறாள். அவர் மறுத்துவிடுகிறார். அயலாவை மணக்க இவர்கள் வீட்டிற்கு வந்த கேப்டனுக்கு £3000 வருமானமுண்டு. சிறியவள் கேப்டனிடம் அயலாவைப்பற்றிக் கோள் சொல்லி, தன்னை ஓடிப்போய் மணம் செய்ய அழைக்கிறாள். ஓடிப்போகிறாள். தகப்பனார் பின்னாலேயே வந்து அழைத்துப் போய் திருமணம் செய்து வைத்து, பணம்தர மறுக்கிறார். அயலா கற்பனை உலகில் கோட்டையில் ராஜகுமாரனிருப்பதாக நினைக்கிறாள். தாய்மாமன் மகனும், இந்த கேப்டனும், ஒரு விகாரமான பெருந்தன்மையான கர்னலும் அவளை விரும்புகிறார்கள். கர்னலை ஆடம்பரமாக அற்புதமாக மணக்கிறாள். லூசி ஓர் உயர்ந்த மனமுள்ள ஏழைச் சிற்பியை விரும்பி மணக்கிறாள். தாய்மாமன் சிறுஉதவியைச் செய்கிறார். கர்னலுக்கு £6000 வருமானம். அவர் உயர்ந்தவர், உன்னதமானவர், அயலா அவரை விரும்புகிறாள். ஆனால் அவள் கற்பனைக்குரிய ராஜகுமாரன்

அவரில்லை. கர்னல் விகாரமானவர். ஆனால் மிகப்பெரிய இடத்துப் பிள்ளை. இதே சமயத்தில் அயலாவுக்கு அவர்கள் வீட்டில் நெருங்கிப் பழக்கமான பெண்ணை, பெரும்பிரபு திருமணம் செய்துகொள்கிறார். போப் ஆண்டவர் திருமணத்தை நடத்தி வைக்கிறார். அயலாவின் நிலை மடுவு. கர்னல் அந்தஸ்து மலை. திருமணம் நடக்கிறது.

மனம் ஒளியில் லயித்தால் உயர்வு கொடுமையின்றி வரும். 1900க்குமுன் உலகம் கொடுமை நிறைந்தது. 1956இல் நரகம் அழிந்து, 1973இல் சொர்க்கம் பிறந்துவிட்டது.

❀ ❀ ❀

**947) அருள் நிர்ப்பந்தப்படுத்தாது. நிச்சயமாகச் சுட்டிக்காட்டும். நிர்ப்பந்தம் செய்யும் அருள் உள்ளிருந்து எழுவது. அதை ஆன்மாவின் அருள் என்கிறார்.**

***உள்ளிருந்து எழுந்து நிர்ப்பந்தம் செய்யும் அருள் ஆன்மாவின் அருளாகும்.***

இலட்சக்கணக்கானவர் வாழும் இவ்வூரில் 150 பேர் பல முனைகளில் வெற்றி பெறுகின்றனர். 15,000 பேர் சிறு அளவில் முன்னேறுகின்றனர். மற்றவரில் சிலர் இவர்கள் முன்னேற்றத்தைக் கண்டு வியக்கின்றனர். மீதிப்பேர் எதையும் கண்டுகொள்வதில்லை.

✡ சாதாரண மனிதன் சும்மாயிருந்தாலும், குடும்பம் அவனை முன்னுக்கு வரக் கட்டாயம் செய்யும்.

✡ சமூகம் மாறி வளரும் நேரத்தில், சமூகம் அனைவரையும் முன்னுக்கு வரக் கட்டாயப்படுத்தும்.

✡ அன்னையை அறிந்தபின் அவர் சூழல், நம்மையறியாமல் நம்மை முன்னுக்குவரக் கட்டுப்படுத்தும்.

அன்பர்கள் அதுவரை தவறாது பெற்றுக் கொள்கின்றனர்.

அப்படிப் பெறுவதுதான் வேலையே கிடைக்காதவனுக்கு அமெரிக்காவில் வேலை கிடைக்கிறது.

✡ அன்னையின்சூழல் கட்டாயப்படுத்தாமல், வாய்ப்பாக அளிப்பது பெரிது. கட்டாயப்படுத்தியது சாஸ்திரியும், இந்திராவும் பிரதமரானது.



கட்டாயப்படுத்தாத வாய்ப்பு உலகத் தலைவராவது.

✡ அன்பருடைய ஆன்மா விழிப்பாக இருந்தால், அதன் அருள் செயல்படுமானால், அது நிர்ப்பந்தம் செய்யும். அது விழிப்பான ஆத்மா, அன்னைச் சூழலில் செயல்படுவது.

*“கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு வரும்” என்ற சொல் மனிதனுடைய ஆத்மா விழிப்புற்று செயல்படுவதைக் குறிக்கும். அன்பன் அன்னைச் சூழலில் ஆன்ம விழிப்போடு செயல்படுவது அவனுடைய அதிகபட்சம் பெறும்நிலை.*

✡ 1910இல் பகவானுக்கு இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டதுஎனத் தெரியும். 1908இல் அசரீரி அவருக்கு அதைக் கூறியது.

1917இல் அன்னை, இந்தியா சூட்சுமஉலகில் சுதந்திரம் அடைந்ததைப் பார்த்தார்.

இந்தியத் தலைமையில் ஆன்ம விழிப்புற்றவரில்லைஎன்பதால் சுதந்திரம் 30 ஆண்டு தாமதமாயிற்று.

✡ பகவான் நெஞ்சம் சுதந்திரத்தை நாடியது.

சுதந்திரத்திற்காக யோகத்தை நாடினார்.

அவர் மனம் யோகத்தை நாடவில்லை.

அவர் ஆன்மா விழிப்புற்று, அருள்பாலித்து, யோகத்தை மேற்கொள்ள கட்டளையிட்டது.

அதனால் பகவான் பூரணயோகத்தைக் கண்டார்.

✡ அன்பர் வருமானம் தேடி விவசாயத்தை நாடினார்.

விவசாயம் அன்னைச் சூழலால் அபரிமிதமாகப் பலித்தது.

அன்பர் ஆழ்மனத்தில் நாட்டுச் சேவையிருந்தது. அதற்கு வழியில்லை.

அன்னைச் சூழலின் அதிகபட்சம் அதைச் சுட்டிக்காட்டியது.

அது கிராமச் சேவையாகவும், நாட்டு விவசாயிகட்குச் செய்த சேவையாகவும் மாறியது.

உலகெங்கும் அக்கருத்து பரவியது.

✡ ஒருவர் பெற்ற ஆன்மவிழிப்பை உலகம் பெற்ற ஆன்ம விழிப்பாக்குவது அன்னைச் சூழல்.

✡ பண்பை வலியுறுத்துவதால், மரியாதையைப் பாராட்டுவதால், செயல் சில்லரையாக இருக்க மறுத்தால், ஆன்மா விழிப்புற்று, அதன் அருள் செயல்படும்.

*அதன் செயல் அன்பரைக் கட்டுப்படுத்துவது.*

மேரி, தாயாருக்குத் திருமணமாகுமுன் தரித்தவள். தாயார் குழந்தை பிறந்தவுடன் அமெரிக்கா போக முடிவுசெய்து குழந்தையை, யாருக்குத் தரித்ததோ அவர் தம்பியிடம் கொடுத்துவிட்டுப் போனார். மேரியின் தகப்பனார் அடித்துக் கொல்லப்பட்டார். மேரி 12 ஆண்டு வெளியூரில் வளர்ந்தாள். சித்தப்பா, பெண்ணை பண்புமிக்க பெருந்தன்மையாக, குடும்பப் பெண்ணாய் வளர்த்தார். இவள் பிறப்பின் இரகஸ்யம் எவருக்கும் தெரியாது. பிரான்க்என்ற இளைஞன் உயர்குடி பிறந்தவன், மேரியை விரும்புகிறான். அவன் குடும்பம் எதிர்க்கிறது. மேரிக்கோ, பிரான்க்குக்கோ மேரியின் பிறப்பின் இரகஸ்யம் தெரியாது. குடும்பம் பெண்ணுக்குப் பணமில்லை என எதிர்க்கிறது, இரகஸ்யம் தெரியாது.

✡ மேரி தன் மனச்சாட்சிப்படி நடக்க பெருமுயற்சி செய்கிறாள்.

✡ மனச்சாட்சி தூய்மையாக இருப்பதால் ஆன்ம விழிப்பு ஏற்படுகிறது.

✡ *ஆன்மா விழிப்பதால் நிலைமை மாறி, பெருஞ்செல்வம் அவளுக்கு வருகிறது. அது அவள் தாய்மாமன் பெற்ற செல்வம்.*

✡ அந்தப் பகுதிகளில் மேரி அதிகபட்ச பணக்காரியாகிறாள். பிரான்க் குடும்பம் திருமணத்தை ஏற்கிறது.

✡ ஆன்மா விழித்து, அனைத்தையும் மாற்றுவதற்கு இது சிறந்த உதாரணம்.

❀ ❀ ❀

*தொடரும்......*

**ஜீவிய மணி**

**இலட்சியவாதி தன் சேவையை அறியமாட்டான்.**



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

என். அசோகன்

401. நமக்குச் சமமானவர்களிடம்தான் நமக்குப் போட்டி மனப்பான்மை எழும். நமக்கு மேலுள்ளவர்களோ நமக்குக் கீழுள்ளவர்களோ போட்டி மனப்பான்மையைத் தூண்டுவதில்லை. நமக்கு மேலுள்ளவர்களை நம்மைவிட உயர்ந்தவர்கள்என்று ஏற்றுக் கொள்வதால் நாமவர்களை எதிரிகளாக நினைப்பதில்லை. நமக்குக் கீழுள்ளவர்களை நம்மைவிடக் குறைந்தவர்கள்என்று நினைப்பதால் அவர்களையும் போட்டியாக நினைப்பதில்லை.

402. உறவினர்களிடையே இருக்கின்ற உறவு, நட்பு மற்றும் பகைஎன்று மாறி மாறிதான் வரும். நிரந்தர நட்போ அல்லது நிரந்தரப் பகையோ காண்பதரிது.

403. ஒரே விதமான (personality) பர்சனாலிட்டி, ஒரே விதமான ரசனைகளும் கொண்டவர்களிடையே நட்பு எளிதில் மலரும். நேர்மையானவர்கள் நேர்மையற்றவர்களுடன் நட்பாக இருப்பது அரிது.

404. அவரவருடைய நட்பு வட்டாரத்திலுள்ளவர்களுடைய மதம் மற்றும் அரசியல் நம்பிக்கைகளை எதிர்க்காமலும், பணம் கொடுக்கல், வாங்கல் வைத்துக்கொள்ளாமலும் இருக்கும்வரையிலும், நட்புக் கெடாமலும் இருக்கும்.

405. நமக்குச் சிரமம் வரும்போது நம்மோடு இருப்பவர்கள்தாம் நமக்கு உண்மையான நண்பர்கள். சிரமகாலத்தில் விலகிச் செல்பவர்கள் வெறும் ஆதாயத்திற்காகப் பழகுபவர்கள்.

406. உறவினர்களிடமும் நண்பர்களிடமும் கடன் வாங்குபவர்கள் அந்த அளவிற்குச் சமநிலையை இழந்து தாழ்ந்துப் போகிறார்கள். கடனைத் திருப்பிக் கொடுக்கும் பொழுதுதான் அவர்கள் அந்தச் சமநிலையை மீண்டும் பெறுவார்கள். ஆகவே சமநிலையை இழக்க விரும்பாதவர்கள் கடன் வாங்காமல் இருப்பது நல்லது.

407. ஒருவருடைய வீட்டிற்குச் சாப்பிட அழைத்தால், அழைப்பவர் அடுத்தவரைத் தமக்குச் சமமாகக் கருதுகிறார் என்றர்த்தம். இந்தியச் சமூகத்தில் பொதுவாக நமக்குக் கீழிருப்பவரை யாரும் சாப்பிட அழைப்பதில்லை.

408. திருமணம்என்றால் பொதுவாக அவரவருடைய சமூகத்திலேயேதான் திருமணச்சம்பந்தம் செய்துகொள்கிறார்கள். தம் சமூகத்தைத் தாண்டி வெளியில் திருமணம் செய்து கொள்பவர் ஒன்று, மரபிற்குக் கட்டுப்படாத இலட்சியவாதியாக இருப்பர், அல்லது அவருடைய சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவராக இருப்பர்.

409. அடுத்தவர்களுடைய சமூக நிர்ப்பந்தம்தான் பலபேரை பொறுப்பு உள்ளவர்களாகவும், உழைப்பாளிகளாகவும், நன்னடத்தை உள்ளவராகவும் வைத்திருக்கிறது. இந்தச் சமூக நிர்ப்பந்தம் இல்லாவிட்டால் பலபேர் பொறுப்பற்றவர்களாகவும், சோம்பேறி-களாகவும் மாறிவிடுவார்கள்.

410. பழங்காலத்தில் குறைந்தசம்பளம் வாங்கிக்கொண்டு, அதிக வேலை செய்தார்கள். இப்பொழுது அதிகச் சம்பளம் வாங்கிக்கொண்டு குறைந்த வேலை செய்கிறார்கள். முன்னால் நிகழ்ந்த தவற்றிற்கு கர்மபலனாக இது வந்துள்ளது.

411. முன்காலத்தில் சமூகத்தின் மேல்மட்டத்திலுள்ளவர்களுக்கும், கீழ் மட்டத்திலுள்ளவர்கட்கும் இருந்த இடைவெளி ஜனநாயகம், நகர வாழ்க்கை, தொழில்மயம் மற்றும் கல்விவாய்ப்பு ஆகியவற்றின் காரணமாகக் குறைந்து வருகிறது. இடைவெளி குறையும் அளவிற்கு முன்பிருந்த அதிகாரமும் குறைந்துள்ளது.

412. வருமானம், கல்வித் தகுதி, மற்றும் ஜாதி ஏற்றத்தாழ்வுகளின்றி எதையும் பார்க்காமல் எல்லோரையும் சமமாக நடத்துவதென்பது பாராட்டிற்குரிய விஷயம் என்றாலும், நடைமுறையில் குடும்பம்என்ற ஒரு சிறிய வட்டத்திற்குள் இதைக் கடைபிடிப்பது சுலபம். குடும்பத்தைத் தாண்டி அதைவிடப் பெரிய வட்டத்திற்குள் கடைபிடிப்பது அவ்வளவு சுலபமில்லை.

413. பணபலம், பதவிபலம், வாழ்க்கைச்சாதனைகள் ஆகியவை மனிதனுடைய அகந்தையை வலுப்படுத்துகின்றன. இவைகளை இழக்க நேரிடும்போது காற்றிறங்கிய பலூன்போல மனிதனுடைய அகந்தையும் சுருங்கிவிடுகிறது.

414. மனிதனுடைய அகம்பாவம் பிரபஞ்சம் அளவிற்குக்கூட விரியும். அதே சமயத்தில் நிலைமை சரியில்லைஎன்றால் கடுகளவிற்கு சுருங்கவும் முடியும். இத்தகைய ஆற்றல் அதனுடைய வல்லமையை நிரூபிக்கிறது.

415. இந்த உடம்பினுடைய நியாயமான உரிமையாளரும், எஜமானரும் யாரென்று கேட்டால், அது ஆன்மாவாகும். ஆனால், ஆன்மாவிற்குரிய இடத்தை அகந்தை ஆக்ரமித்துக் கொண்டுள்ளது. அகந்தையின் இந்த ஆக்ரமிப்பை அகற்றி, ஆன்மாவை அவ்விடத்தில் நிலைநாட்டும் சக்தி சத்தியஜீவியத்திற்குத்தான் உள்ளது.

416. அகந்தையின் பார்வைக்கு நியாயமற்றதாகவும், தவறாகவும் தெரிகின்ற விஷயங்களெல்லாம் அகந்தையின் பிடியிலிருந்து நாம் விடுபட்டோம் என்றால் தவறாகத் தெரியாது.

417. அகந்தையின் பிடியிலிருக்கும்போது நாம் அடுத்தவரை அழித்துதான் முன்னேற வேண்டும்என்று நினைக்கிறோம். ஆனால் ஆன்மா நம் வாழ்க்கையை நடத்தினால், பரநலத்தைப் பாராட்டுவதன்மூலம் நாமும் முன்னேறலாம்என்று தெரியும்.

418. நம்முடம்பில் காயம் ஏற்படுவதைப்போல் நாம் படும் அவமானங்களை நம் அகந்தை காயமாக எடுத்துக்கொள்கிறது. உடலில் காயம் ஆறுவதைவிட அகந்தைக்கு வரும் காயம் ஆறுவது நாளாகும். மேலும் தனக்குக் காயம் ஏற்படுத்தியவருக்குப் பதில் அவமானம் வழங்கும் வரை அகந்தை ஓயாது. உடல் காயங்கள் மருந்தால் குணமாகும். ஆனால் அகந்தைக்கு வரும் காயங்களை ஆன்மீகச் சாந்திதான் முழுவதும் குணப்படுத்தும்.

419. தண்ணீர் மேலிருந்து கீழிறங்குவதுபோல ஜீவியமும் மேலிருந்து கீழே இறங்குகிறது. ஜீவிய நிலையில் உயர்ந்தவரும், தாழ்ந்தவரும் சந்தித்துக் கொண்டார்கள்என்றால் உயர்ந்தவரிடமிருந்து தாழ்ந்தவரை நோக்கி ஜீவியம் போகும். ஆனால் தண்ணீர் இறங்குவது தெரிவது போல இதனுடைய இறக்கம் தெரியாது.

420. ஒவ்வொரு மனிதனுடைய பர்சனாலிட்டிக்கு ஏற்றவாறும், ஒவ்வோர் இடத்தில் நடக்கும் வேலைக்கு ஏற்றவாறும் சூழல் உருவாகும். ஓர் இடத்திற்குப் புதிதாகப் போகிறோம் அல்லது புதிதாகச் சந்திக்கிறோம் என்றால், அந்நேரம் நமக்கு எழும் எண்ணங்களும், உணர்வுகளும் அத்தொடர்பால் உண்டானவைகளாகும்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் ஒருநிலைப்படுதல்:

மனத்தின் நம்பிக்கை, உணர்ச்சியின் வேகம், உடலின் நிதானம் ஆகியவை மனம் நிலைப்படுதலை நிர்ணயிக்கும். அலைபாயும் மனமுடையவன் ஓடும் எண்ணங்களில் வாழ்பவன். ஓடும் எண்ணம் நின்று, பயன் கருதி செயல்படுவதைவிட்டு, பகுத்தறிவைத் தீட்டாமலிருந்தால் தான் மனம் தூய்மையடையும்.

மனம் தூய்மையடைந்தால், தூய்மையான ஆன்மாவுக்கு வழிசெய்து மோட்சத்தைக் கொடுக்கும்.

சமர்ப்பணம்என்பது பிரகிருதியைப் புருஷனுடன் இணைப்பது. மனத்திட்பம் முழுவதும் ஆத்ம சமர்ப்பணத்திற்காகச் செலவிடப்படுதல் சைத்திய புருஷனில் மனம் நிலைப்பதாகும்.

ஒரு கரணத்திற்குரிய புருஷன் வெளிப்பட்டால்தான், தீட்சண்யமாக மனம் நிலைப்படும். பேசும் பொழுது மனம் நிலைப்பட வேண்டுமானாலும், உணர்ச்சி வசப்பட்ட பொழுது அங்கு உணர்வு நிலைப்பட வேண்டுமானாலும், அதற்குரிய புருஷன் வெளிப்பட வேண்டும்.

***நிலைப்பட்ட மனம் தூய்மையடைந்து மோட்சம் பெறும்.***





# அடுத்த கட்டத்தில் "Mother Response"

வி. ரமேஷ் குமார்

‘‘வாருங்கள், வாருங்கள்’’, வாய் நிறைய வரவேற்றார் ராஜன்.

‘‘ ‘நாம் பின்பற்ற முடியாததை, பிறரைப் பின்பற்றச் சொல்வது கயமை’ என்கிறார் அன்னை. என்றாலும், நான் கொடுத்தப் பட்டியலை வைத்து உடனடியாக அன்னையைத் தரிசித்ததால் கயமையும் எனக்கு சந்தோஷமே’’, மனம்விட்டுச் சிரித்தார்.

‘‘ஒன்றுமில்லை, அன்னை உடனே பலித்ததில் பிரமிப்பில் இருக்கிறார் ரவி. அன்னையிடம்மட்டும் இது எப்படி நடக்கிறது? இது பற்றி அன்னை என்ன சொல்லியிருக்கிறார்?’’ கேட்டார் ஜெகன்.

‘‘ ‘நான் விரும்புவது திருவுருமாற்றம். அதற்கு என் உதவியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அது என்றும் உனக்கு உண்டு’ என்றவர் அன்னை. அன்னைக்காக மாற வேண்டும்என்று ரவி நினைத்தவுடன் - அவர் சொன்னதுபோல டி.வி. பார்க்காமல், கதை, நாவல், புலனாய்வு பத்திரிக்கை படிக்காமல், .... இனி செய்யமாட்டேன் என்று சொன்னதால் ஏற்பட்ட வெற்றிடத்தை சராசரி வாழ்வாக இருந்தால் வேறு ஒரு பொழுதுபோக்கு, நண்பர் அல்லது குடும்பத்தாருடன் அரட்டை, அல்லது கடந்துபோன பழைய நினைவுகளை அசைபோடுவதுஎன்று மாறி இருக்கும்.

ஆனால், அன்னை வாழ்வுக்கு மாற இருந்ததால் உடனடியாக அன்னை அந்த இடத்தை வேலையால் நிரப்பிவிட்டார். காரணம், கடின உழைப்பு ரவியின் சுபாவம். அதனால்தான் சொன்னேன், உன் சுபாவத்தைக் கண்டு, அதைஒட்டி மாற நினைக்க வேண்டும்என்று. தொடர்ச் சங்கிலியாக நடந்தவைகளை யோசி....

✡ வேலை அதிகமானது.

✡ எட்டு மணி நேரத்திலேயே சோர்வுஎன்பது போய் அபரிமிதமான எனர்ஜி வந்தது.

✡ வேலைக்கான திறமை அதிகமானது.

✡ திறமைக்கான ஊதியம் உயர்ந்தது.

✡ சுபிட்சம் வளர்ந்தது.

✡ அதனால் வேலையில் ஆர்வமும், விருப்பமும் வந்தது.

✡ ஆர்வமும், விருப்பமும் இருந்ததால், அது ஆன்மாவின்வேலை ஆனது.

✡ அதனால் அது அன்னையின் கட்டளைகளில் ஒன்றானது.

''அட, இதுதான் நாம் அன்னையை நோக்கி ஓர் அடி வைத்தால், அன்னை பல அடிகள் நம்மை நோக்கி வருகிறார் என்பதா!'' ஆச்சரியப்பட்டார் ஜெகன்.

சிரித்தார் ராஜன். ''உண்மைதான். என்றாலும், அதில் அன்னை எனக்காகப் பல செய்ய வேண்டும்என்ற எண்ணமும் தொக்கி நிற்பது போல உள்ளது. உலகமே அன்னையை நோக்கித்தான் சென்று கொண்டு இருக்கிறது. ஒவ்வோர் அன்பரும் திருவுருமாறப்போவது உறுதி. அன்னை அதை நிச்சயம் செய்வார். என்றாலும், நம் ஆர்வம், நம்பிக்கை, முழுமுயற்சி, ஏற்பை துரிதப்படுத்தும். அதன் மூலம் மாற்றத்தைச் சுருக்கலாம்.

''எப்படிச் சொல்கின்றீர்கள்?'', நெற்றியைச் சுருக்கினார் ஜெகன்.

''நம் வயதினருக்கெல்லாம் தெரியும், பொதுஇடங்கள், ரயில்வே ஸ்டேஷன், போலீஸ்ஸ்டேஷன், தொலைபேசி எக்ஸ்சேன்ஜ், போன்ற அரசு அலுவலகங்கள் சில வருடங்களுக்குமுன் எப்படி இருந்தன என்று. மாறவே மாறாதுஎன்று இருந்தது எல்லாம் இன்று மாறி உள்ளன. Cleanliness, orderliness பிரமிக்க வைக்கின்றது. கம்ப்யூட்டர் முதல் இன்டர்நெட் வரை அனைத்தையும், டெக்னாலஜி முதல் spirituality வரை அனைத்தையும், வெட்டவெளிச்சமாக்குகிறது.



ஜட்ஜ்மெண்ட் முதல் FIR வரை அனைத்தும் திறந்த புத்தகங்கள் ஆகின்றன. Quality systems, HR systems, CRM systems இன்று கட்டாயமாகிப் போனது உண்மையின் பல வடிவங்கள். அவ்வளவு ஏன், சில ஆண்டுகளுக்குமுன்வரை sales tax, labour, income tax என்று ஒவ்வொன்றுக்கும் ஒரு லெட்ஜரை பராமரித்து, ஒன்றுக்கொன்று பொருந்தாமல் வைத்திருப்போம். கறுப்பு பணம் அதிகம் வைத்திருப்பவன் கெட்டிக்காரன். இன்று.... அனைத்து டிபார்ட்மெண்டு-களும், கோரிலேட் செய்யப்பட்ட பிறகு ஒரே மாதிரியான கணக்கை பராமரிக்கின்றோம். எதற்கு பிரச்சினையென்று ஒழுங்காக பராமரித்து வரியைக் கட்டிவிடுவதோ, சட்டத்திற்கு உட்பட்டு வேறு எதுவும் செய்வதோ நடக்கிறது. பேங்க் பரிமாற்றங்கள் உண்மையின் வளர்ச்சி. சிகரம் வைத்தாற்போல தம் பிரதிநிதியை திரும்பப் பெறும் சட்டமும், தகவல் அறியும் உரிமைச் சட்டமும் சமூகம் அன்னை வழிக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறது என்பதைத்தானே காட்டுகிறது. கட்டாயத்தின்பேரில் இன்று நடப்பது சில காலங்களில் சமூகத்தின் சுபாவமாகும்''.

''நானெல்லாம் இதைக் கவனிக்கவே இல்லையே!'' வெட்கப் பட்டார் ஜெகன்.

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், எல்லா நதிகளும் கடலை நோக்கி..... என்பதுபோல எல்லா வாழ்வும் அன்னையை நோக்கி..... என்றாகிறது அல்லவா?'' முதன்முறையாக வாயைத் திறந்தார் ரவி.

''ஆமாம், ஆனால் நாம்தான் அதனை எதிர்த்து நீச்சலடித்து, மூச்சு திணறிக்கொண்டு இருக்கின்றோம். உயர்ந்துகொண்டே போகும் மரத்திற்கு வேர்கள் ஆழமாக இருக்க வேண்டும். முன்னேறிக் கொண்டே போகிற பக்தனுக்கு அன்னை அடிப்படை பலமாக இருக்க வேண்டும்'', தத்துவார்த்தமாக சொல்லிக் கொண்டே மவுனமானார் ராஜன்.

சூழலே தியானத்தின் இனிமையைத் தந்தது.

❀ ❀ ❀

# நண்பனும் எதிரியும்
# பொறாமையும் புகழும்

கர்மயோகி

- ✡ மனிதஉறவு அகந்தையுள்ள இருவர்உறவு.
- ✡ அகந்தை பணியும் அல்லது எதிர்த்து அழிக்க விழையும்.
- ✡ *அன்பான நாணயம் அகந்தையறியாதது.*
- ✡ முதலாளி, தொழிலாளி; பெற்றோர், பிள்ளைகள்; கணவன், மனைவி; குரு-சிஷ்யன்; பெரிய பார்ட்னர், சிறிய பார்ட்னர்; அடக்கத்திற்குரிய உறவுகள்.*

  இவை இடம்மாறலாமே தவிர மனித சுபாவம் மாறாது.
- ✡ அன்பும் நாணயமும் மனிதத் தன்மைக்குரியவை.

  அகந்தை அழிந்து மனிதன் பிறக்கிறான்.
- ✡ நண்பன் எதிரியாகி அழிக்க விரும்புவது பொறாமை.

  எதிரி நண்பனாகி சேவை செய்வது பிரபலம், புகழ்.

  பொறாமையையும், புகழையும் கடந்த செயல் பிரபஞ்சச் செயல் (impersonal universal action).

  அகந்தையுள்ளவரை நட்பில்லை.

  மனிதத் தன்மையில்லாத நட்பு நட்பன்று, பணிவு.
- ✡ அடக்கம் சமூக உணர்வாக* மேற்சொன்ன உறவுகளில் வெளிப்படுகிறது.

  அடக்கம் ஆன்மீக உணர்வானால் மேற்சொன்ன உறவுகள் நாகரீகத்தை வெளிப்படுத்தும்.
- ✡ பிரகிருதி புருஷனாவது பரிணாமம்.

  மாயை பிரம்மமாவதும், பிரகிருதி புருஷனாவதும், சக்தி ஈஸ்வரனாவதும் பரிணாமம்.



முதலிரண்டும் சிரமம். மூன்றாவது நடைபெற, சிறியது விரும்பி பெரியதிற்குப் பணிய வேண்டும்.

*சிறியது அடக்கத்தால் பெரியதற்குப் பணிய, பெரியது ஆனந்தத்தால் சிறியதற்குப் பணிய வேண்டும்.*

சிறியது பணிவது சுதந்திரம்.

பெரியது சரணடைவது பரிணாமம்.

சுதந்திரத்தில் பரிணாமம் நடைபெறுவது பூரணயோகம்.

கணவன், மனைவி திருமணத்திலாரம்பித்து, பரிணாமத்தைப் பயில்வது துறவறத்தின் தூய்மையுள்ள இல்லறம்.

அமெரிக்கர்கள் சுயநலத்திற்காகப் பரநலத்தின் உதவியை நாடுவது, வாடிக்கைக்காரர்களைத் திருப்திபடுத்தி, அவர்களை அரியாசனத்தில் இருத்துவது.

அமெரிக்கா சுயநலம், அதிகாரத்தை (domination) அழிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகிறது.

அதனால் அதிகாரம் இடம் மாறுகிறது, அழியவில்லை.

சந்தர்ப்பத்தால் மாறுவது புறத்தின் முயற்சி.

அகவுணர்வு ஆழ்ந்து சிறப்பது ஆன்மீகவாழ்வின் தவம்.

சந்தர்ப்பம் ஒரு யுகத்தில் செய்வதை தவம் க்ஷணத்தில் செய்யும்.

*அமெரிக்கர் 400 ஆண்டில் பெற்ற செல்வத்தை இந்தியா 4 ஆண்டில் பெறும் வழி அது.*

புறத்தை அகமாக்க எதிர்ப்பும், வெறுப்புமின்றி புறத்தை ஏற்பது.

கூட்டாளி பூஜை செய்கிறார்.

முதலாளி இலஞ்சம் வாங்குகிறார்.

நண்பன் அர்த்தமின்றி செயல்படுகிறான்.

பூஜையும், இலஞ்சமும், அர்த்தமற்றதும் எரிச்சல்பட்டால் பாதிக்கும்.

எரிச்சலின்றி ஏற்றால், அவை நம்மை விட்டு நீங்கும்.

புரிந்து மலர்ந்தால், நீங்குவதற்குப் பதிலாகத் திருவுருமாறும்.

**சிறுசெயல் திருவுருமாறுவது பெரிய நேரம்.**

சிறுசெயல் திருவுருமாறும் மனநிலை அன்னையை ஏற்பது.

எதிர்க்காமல் ஏற்பது ஏற்றமான நோக்கம்.

முதலாளியை வெல்லலாம், தொழிலாளியை மாற்றலாம், பெற்றோர் வயப்படலாம், பிள்ளைகள் கட்டுப்படலாம், குருவும் இசைவார், சிஷ்யனும் சிறப்பாவான், எவரும் பிடிபடுவர்.

கணவன் கட்டுப்படமாட்டான்.

மனைவியின் மாற்றம் மனிதனறியாதது.

கணவனை தெய்வமாக்க வந்தவள் மனைவி.

மனைவியை மனுஷியாக்கும் திறன் கணவனுக்குரியது.

திருவுருமாற்றும் திருமணம் திருவுள்ளம்.

புரட்சி மலர்ச்சியாவது திருவுருமாற்றம்.

மலர்ச்சி மகிழ்ச்சியாவது வாழ்வு.

திருமணம் வாழ்வின் சிகரம்.

சிகரம் சிறப்புறுவது சிந்தனை.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பொறுக்கக்கூடாததை அனுமதிப்பது, கட்டுப்பாடான பொறுமை (tolerance). ஞானத்தால் அக்காரியத்தில் இறைவன் திருவுள்ளத்தை அறிந்து அமைதியாக இருப்பது பொறுமை (patience).

***ஞானம் பொறுமை தரும்.***



# மனத்தின் நிலைகள் பல

கர்மயோகி

✡ Life Divine நன்கு விளங்க அதற்குரிய மனநிலை வேண்டும்.

✡ அது என்ன மனநிலை? நம்மால் அதை விவரிக்க முடியுமா?

✡ உடல் திருவுருமாறும்பொழுது எரியும். எந்த நேரமும் ஓலமிடுவது போலிருக்கும். "இந்த யோகத்தை செய்ய நான் யாரையும் அழைக்க மாட்டேன். பகவான் ஸ்ரீ அரவிந்தர் இதே நிலையில் எப்பொழுதும் இருந்திருக்கிறார்என்பதை நான் அப்பொழுது அறியவில்லைஎன்று இப்பொழுது நினைத்தால் கண்ணீர் பெருகுகிறது. உடல் திருவுருமாறுவது உடலெல்லாம் எந்த நேரமும் பற்றிஎரிவதாக இருக்கிறது" என்று அன்னை கூறினார்.

✡ குழப்பம், மனதில் தெளிவு தரும்.

கவலை ஏற்பட்டால், சந்தோஷம் வரும்.

கலகம் வந்தால், நியாயம் பிறக்கும்.

உள்ள தெளிவு போனால், பெரிய தெளிவு வரும்.

உள்ள தெளிவு போவது, மனக் குழப்பம்.

இருக்கும் சந்தோஷத்தை அழித்துப் பெரிய சந்தோஷம் பெற முயன்றால், கவலை பற்றிக்கொள்ளும்.

உடல் திருவுருமாற நோய்வாய்ப்பட வேண்டும்.

✡ அன்னை உடலைப்பற்றிப் பேசுவது யோகத்திற்காக. உணர்வு திருவுருமாறுவது அதிர்ஷ்டம். மனம் திருவுருமாறுவது மேதை பிறப்பது.

✡ மனிதன் சமூகத்தைஒட்டி வாழ்கிறான் (social consciousness). அதைக் கடந்து வந்தால் (psychological consciousness) அவன் மனிதனாகிறான். நாம் பேசுவது எல்லாம் வெறும்பேச்சு. பேச்சு உணர்ச்சியாகி, செயலாகவேண்டும். செயலானால் பலிக்கும்.

✡ ஹிப்பியாக இளைஞர்கள் வீட்டைவிட்டு வெளியேறியபொழுது பெற்றவர் எப்படி வயிறெரிந்தார்என அறிவோம். அது லேசாக சமூகம் அசைவதாகும்.

✡ இன்று பிள்ளைகளிருப்பதைப்போல் 100 ஆண்டுகட்குமுன் இருந்திருந்தால், பெற்றோர் மனம் எப்படிக் கலங்கியிருக்கும், எப்படிக் கொந்தளித்திருக்கும்என நாம் கற்பனை செய்யலாம். அது சமூகத் திருவுருமாற்றத்தில் லேசானதென்றால், மனம் அதைக் கடந்தது, உடல் முடிவானது. இன்று பெண்கள் இருப்பதைப்போல் 100 ஆண்டுகட்கு முன்னிருந்திருந்தால் உலகம் ஏற்றிருக்குமா? அதுவே திருவுருமாற்றம்.

✡ சொத்துரிமை, வாரிசு, திருமணம் அழியவேண்டும் என்றார் அன்னை. இன்று அன்பர்கள் மனதாலும், உணர்வாலும் அதை ஏற்க முன்வரவேண்டும்.

✡ இன்று மனத்தாலும் இவற்றைப் பலரால் நினைக்க முடியாது. உணர்வால் ஏற்பது, நடைமுறைக்கு வருவதுஎன்பது அசாத்தியம். இவை நடைமுறைக்கு வந்தால்,

- ❀ எவரும் சொத்து சேர்க்கக்கூடாது.
- ❀ உள்ள சொத்தைப் பிள்ளைகட்குக் கொடுக்கக்கூடாது.
- ❀ திருமணம்என்ற பழக்கம் கைவிடப்பட வேண்டும்.

✡ ஒரு வீட்டில், ஆபீசில், கட்சியில் இன்று சுயநலம் எப்படிச் செயல்படுகிறதுஎன நாம் அறிவோம். கடையில் வியாபாரம் பெருகும் பொழுது, முதலாளிக்கு அதிக வருமானம் கண்ணில் படுவதில்லை. கமிஷனுக்காக வேலை செய்பவர் அதிகக்கமிஷன் பெறுவது கண்ணை உறுத்துகிறது. ‘‘அதிக லாபம் வாராவிட்டாலும் பரவாயில்லை, சேல்ஸ்மேன் அதிகக் கமிஷன் பெறக்கூடாது’’ என்பது முதலாளியின் மனம். சேல்ஸ்மேன் அதிகக் கமிஷன் பெறுவது முதலாளிக்கு சந்தோஷம் தருவது மனிதத் தன்மை. அந்த முதலாளி சுயநலத்தைக் கடந்து வருபவர்.

✡ சுயநலமான போக்கும், அன்னைக்குரிய மனநிலையையும் சில ஒத்திட்டுப் பார்ப்போம்.



- ❀ சேல்ஸ்மேனுக்கு அதிகக் கமிஷன் இல்லாமல், தன் இலாபம் பெருக மனிதன் விரும்புகிறான்.

  சேல்ஸ்மேனுடைய அதிக வருமானம், முதலாளிக்குச் சந்தோஷம் தர வேண்டும்.
- ❀ உடன்பிறந்தவர், சக ஊழியர்களுடன் போட்டியிடுகிறோம்.

  உடன்பிறந்தவரும், சக ஊழியரும் முன்னேற உழைக்க வேண்டும்.
- ❀ நெருக்கடி வந்தால் பொய் சொல்லித் தப்பிக்க முயல்வது.

  உண்மையிலிருந்து வழுவாத நிலை.
- ❀ பிறர் அதிர்ஷ்டம் மனிதனுக்குப் பொறுக்கவில்லை.

  பிறர் வாழ்வது நம் மனம் மலர்வது.
- ❀ வேலைக்கு மனிதன் கசங்குகிறான்.

  வேலை தெம்பு அளிக்க வேண்டும். வேலை செய்ய ஆசைப்பட வேண்டும்.
- ❀ பிறர்மேல் சந்தேகம் எழுகிறது.

  சந்தேகம்எழ முடியாத சந்தோஷம் எழவேண்டும்.
- ❀ தன்னை மட்டும் மனிதன் நம்புகிறான்.

  நம்பிக்கைக்குப் பாத்திரமானவரை கட்டாயம் நம்ப வேண்டும்.
- ❀ பிறரை மட்டமாகப் பேசுகிறான்.

  பிறரை உயர்வாக நினைக்க வேண்டும், பேச வேண்டும்.

மேற்சொன்னபடி மனம் மாறுவது விரும்பத்தக்கது. இது போன்ற பட்டியலை முழுமைப்படுத்தி, அதன்படி நடப்பது சிறப்பு.

✡ உடலின் ஜீவியமும், அதன் பொருளும் திருவுருமாறினால் யோகம் பூர்த்தியடையும். நாம் இங்கில்லை.

✡ நமக்கு நாமுள்ள இடம் முக்கியம்.

✡ சமூகமும், தர்மமும், நியாயமும், குறிப்பாக நாமும் - அகந்தையும் - நமக்கு முக்கியம்.

✡ வேறு வகையாகச் சொன்னால், நமக்குப் பொது விதியைவிட சொந்த விஷயம் முக்கியம். The personal is more important than the impersonal. ஓர் ஆபீசில் (micronutrient expert) குறிப்பிட்ட வல்லுனரைத் தேடி அலுத்தபிறகு, 1970இல் அவர் கிடைத்தார். அவர் சர்க்காரில் அன்று 650 ரூபாய் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்தார். கம்பனி அவருக்கு எந்தச் சம்பளமும் கொடுக்கத் தயாராக இருந்தது. அவர் ரூ.2000 கேட்டார். அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அக்கம்பனி விதிப்படி புதிய ஊழியருக்கு அவர் தற்சமயம் பெறும் ஊதியத்தைப்போல் இரு மடங்குக்குமேல் தரக்கூடாதுஎன்பது சட்டம். எனவே அவர் ரூ.1300/- சம்பளத்தை ஏற்று வேலையில் சேர்ந்தார். சந்தர்ப்பம் மாறி 15ஆம் நாள் அவர் பழைய வேலைக்குப் போக வேண்டியதாயிற்று. கம்பனிச் சட்டத்தை அவர் மனம் ஏற்காமல், தம் அபிப்பிராயம் பூர்த்தியாக வேண்டும் என மனதால் வலியுறுத்தியதால், நிலைமை மாறியது.

✡ இம்மாறுதல்கள் புரியும்படி சில உதாரணங்களைக் கருதுவோம்.

✡ டிரஸ் மாறுகிறது. அனைவரும் மாறுகின்றனர். சிலர் மாறுவதில்லை. சட்டமோ, சமூகமோ இதைச் செய்யும்படி நம்மைக் கட்டாயப்படுத்தவில்லை. நமக்கே மாறவேண்டும்என்ற எண்ணம் நம்மைக் கட்டாயப்படுத்துகிறது. திறனற்றவர் சமூகத்தில் மாறாவிட்டால் அவர் மனம் சங்கடப்படும்.

✡ வேலை தேவையில்லாதவர் வேலைக்குப் போகாவிட்டாலும், திருமணம் தேவைப்படாதவர் திருமணம் செய்து கொள்ளா விட்டாலும், சமூகம் அவர்களைக் கண்டிக்கும், கட்டாயப்படுத்தும். அக்கட்டாயத்திற்கு இணங்குபவருக்கு முரண்பாடு, உடன்பாடு என்றால் புரியாது. முரண்பாடு முரண்பாடாகவேயிருக்கும். உடன்பாடுஎன மனத்தாலும் நினைக்க முடியாது. சமூகம் அறிவதை அவனும் அறிவான். சொந்த புத்தியிருந்தாலும் வேலை செய்யாது. அனந்தனின் தர்க்கம் அவனுக்குப் புரியாது. வைக்கோல் போரும் தங்க மோதிரமும் ஒன்றாக அவனுக்குத் தெரியாது. பணக்காரன் அவனுக்குப் புத்திசாலியாகவும், நல்லவனாகவும் தெரிவான்.

✡ சமூகத்தை முடிவுஎனக் கருதுபவனுக்கு Life Divine புரியாது.



தர்ம நியாயத்திற்குக் கட்டுப்பட்டவருக்கும் புரியாது. எந்த பங்கமுமில்லாத தெளிவான அறிவுக்கு Life Divine புரியும்.

✡ இந்தியராகிய நாம் கர்மத்தை நம்புகிறோம். கிறிஸ்துவர்கள் நரகத்தையும் மோட்சத்தையும் நம்புகின்றனர். மத நம்பிக்கையைக் கடந்து மனிதனுக்கு மனசாட்சி, நியாய மனப்பான்மையுண்டு. அவனுக்குக் கொடுமையாகாது. ஸ்ரீ அரவிந்தர், ‘‘இதயம் இடையறாத இன்பத்தைப் பெறவல்லது’’ என்று கூறுவது இப்படிப்பட்டவருக்குப் புரியாது. தர்ம, நியாய மனப்பான்மை இக்கருத்தை அறிய சிரமப்படும்.

✡ தானே படித்தவனுடைய அறிவை, பட்டத்தைப் போற்றுபவன் அறிவான். ஊரும், உலகமும், கல்லூரியும், பட்டமும் அவனுக்கு முக்கியம். படிப்பு, பட்டத்தைக் கடந்ததுஎன அவனால் அறிய முடியாது.

✡ பூனை சரியில்லாத தன் குட்டியைக் கொல்வதையும், மீனைப் பிடித்துச் சாப்பிடுவதையும் இப்படிப்பட்டவர்களால் பொறுக்க முடியாது. ஆத்மாவின் அனுபவம் முடிந்ததால் அது உடலை விட்டுப் போக வேண்டும்என்பதை அவரால் ஏற்க முடியாது, உடல் பதைபதைக்கும், உள்ளம் உருகிக் கரையும், கவலை கட்டு மீறும்.

✡ Life Divineஇல் எந்தக் கருத்துப் புரியவில்லை, எந்த மனநிலை புரிவதற்குத் தடையாக இருக்கிறதுஎன்று காணவேண்டும். Life Divine கருத்துகள் நம்முள் எந்த மனநிலையையும் புண்படுத்தும். அதைக் காண்பது ஆராய்ச்சி.

✡ அறிவுக்குப் புரியாதது ஜீவியத்திற்குப் புரியும்என்கிறார் பகவான். மனம் உணர்ச்சி வசப்பட்டிருந்தால் இது புரியாது, சப் என்றிருக்கும். காரணம் உணர்ச்சிக்கு ஜீவியம் புரியாது; தடை.

✡ திருடனுடைய அடி திருவடி, விபசாரியின் கற்பு உயர்ந்தது என்கிறார் பகவான். இதைக் கேட்டால் கர்ணகடூரமாக இருக்கும், எரிச்சல் வரும். இது புரிய வேண்டியதில்லைஎன மனம் கூறும். எது எப்படியானாலும், கருத்து புரியாது.

✡ செயல் வீரனிடம், "அனந்தம் எடுத்தால் குறையாது" என்றால், அவன், "இதையெல்லாம் கேட்க எனக்கு நேரமில்லை" என்பான். அவன் மனம் ஸ்தூலமானது; ஜடமானது.

✡ இவற்றை ஏற்று, ஆராய்ச்சி செய்தால், மனம் மாறுவது - தலைகீழாக மாறுவது - தெரியும். Life Divine புரியக்கூடிய மனநிலை உற்பத்தியாகும்.

## சில முக்கியக் கருத்துகள்

1) அறியாமையின் ருசி முடிந்தது.

சிறந்தவராலும், இதை உணர முடியாது. உடலால் அறியும் அளவு இன்று மனிதன் விழிப்பானவனாக இருக்கவில்லை.

2) ஆன்மா உலகை ஆளும்என்ற கருத்து அறிவுக்கு அப்பாற்பட்டது. ஆன்மாஎன்பதை நாம் கண்டதில்லை. அது எண்ணம். சத் மாறி ஜடமான ஆன்மா உலகையாளும். மனிதன்என்பது மனம், உணர்வாகவுமிருப்பான். அவனுக்கு இக்கருத்து காததூரம்.

3) புறம், அகமானால், காரியம் உடனே முடியும். காலத்தில் வாழும் மனிதன் கடந்ததைக் கடந்த நிலைக்குப் போவது இது. மனிதன் காலத்துள், காலத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு வாழ்கிறான்.

4) காலத்தைவிட்டு வெளியேறியவனுக்கே காலத்தின் 3ஆம் நிலை புரியும். நாம் அகந்தையுள், மனத்துள், காலத்துள் வாழ்கிறோம்.

5) ததாஸ்துஎன மாயை உலகை சிருஷ்டித்ததுஎன்பது அற்புதமாக இருக்குமே தவிர அறிவுக்கு விளங்காது. சூட்சுமம் தெரிந்தால் புரியும்.

6) ஆசை இயலாமை. ஆசையை பலமாக நினைக்கும் மனிதன் எப்படி ஆசை இயலாமைஎன ஏற்பான்.

7) தெய்வீக உடல்என்ற சொல்லைப் பயன்படுத்திய பகவான் தெய்வம் பயன்படுத்தும் உடல்என நமக்காக மாற்றிச் சொல்கிறார். பொய்யான காயம் தெய்வீகமாகும்என நம்புவது கடினம்.



8) கடவுள்கள் தங்கள் ஜோதியில் தங்களை மறந்துவிட்டனர். விலங்குக்குத் தேவையென்பதில்லைஎன்கிறார் பகவான். மனிதன் தன் ஆசையில் மூழ்கித் தன்னையும், உலகையும் மறந்திருக்கும் பொழுது அவனுக்கு இக்கருத்து எப்படி ஏற்புடையதாக இருக்கும்?

9) அடிமனம் மேல்மனத்தை வற்புறுத்தி நோய், நஷ்டம், விபத்து ஆகியவற்றை நாடுகிறது. சூரியன் உலகைச் சுற்றி வருவது தெரிகிறது. உலகம் சூரியனைச் சுற்றி வருவது தெரியவில்லை. அந்நிலையில் எது புரியும், எப்படிப் புரியும்? எனக்கு நஷ்டம் வந்துவிட்டதுஎன்று நான் கவலைப்படும் பொழுது, நானே நஷ்டத்தை நாடுகிறேன்என்பது உணர்வுக்கு ஏற்காதுஎன்பதுடன், அறிவுக்கும் பொருத்தமில்லைஎன்பான் மனிதன்.

10) சத்என்பதின் வீச்சு Real-Idea ஜீவனுள்ள எண்ணம். அதில் அறிவும், உறுதியும் இணைந்துள்ளன. நினைத்தது நடக்கும்என்ற கருத்து நமக்கு நடைமுறையில் இல்லை. இந்த அனுபவமில்லாமல், இதை எப்படி ஏற்க முடியும்?

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சாரத்தைச் சேர்ப்பது சைத்தியபுருஷன். எனவே பூரணம் அவனில் ஆரம்பிக்கின்றது. எல்லாப் பகுதிகளின் சைத்திய புருஷன் வெளிவந்தால் பூரணம் முதிர்கிறது, முதிர்ந்து சேருகின்றது. சத்தியஜீவியம் முதிர்ச்சியடைந்தால் (psychic substance) ஜடத்தின் திடத்தன்மையை அடைந்து சத்தியஜீவனாகிறது.

***சைத்தியபுருஷன் சாரத்தால் வளர்வது.***

# வாழ்வின் பெருவழிகள்

கர்மயோகி

நம் நாட்டுப் பரம்பரை கர்மம். அன்னை கர்மம் முடிவானதில்லை என்கிறார். அவரை ஏற்றவுடன் நம் கர்மம் திறனிழந்துவிடுகிறது. கர்மம் ஒருவர் வாழ்வில் அவர் அனுமதியின்றி செயல்பட முடியாது. ஒரு கர்மத்திலிருந்து விடுபட அது எந்தக் குணம் வழியாக வெளிவருகிறதோ அதை நாம் மறக்க வேண்டும் என அன்னை கூறுகிறார். ஒருவர் "நான் செய்யும் வேலை எதுவும் கூடிவருவது இல்லை. அது என் கர்மம்" என்றால், அவர் கர்மம் அவர் கோபத்தால் வெளிப்படுகிறது எனில், அவர் கோபப்படவில்லை எனில், அவருக்குத் தோல்வியில்லை. சுமார் 10 வருஷங்களாக நான் அன்னை கோட்பாடுகளை *Pride and Prejudice* மூலம் எழுதி வருகிறேன். சமீபத்தில் அக்கதையில் வரும் வாழ்வின் பெரு வழிகளை நுணுக்கமாகக் கவனித்து எழுத ஆரம்பித்தேன். சிறிய சட்டங்கள், பெரிய சட்டங்கள், குறிப்பானவை, அதிர்ச்சி தரக்கூடியவை, ஆச்சரியப்படக்கூடியவை என Volume Iஇல் 1553 சட்டங்களை எழுதினேன். இதுவரை பாதி புத்தகத்தில் 10,000 சட்டங்களை எடுத்து எழுதியுள்ளேன். கதை முழுவதையும் ஆராய்ச்சி செய்ய முடிவு செய்துள்ளேன். இக்கதை படமாக வந்துள்ளது. மார்க்கட்டில் விற்கிறது. உரையாடல்களை ஆங்கிலத்தில் ஒவ்வொரு காட்சியிலும் எழுதியுள்ளனர். இந்த உரையாடல்களை தமிழில் எழுத முடியும். அது வெளிவர சில மாதங்களாகும். சென்னையில் படத்தைப் போட்டு ஒவ்வொரு காட்சியாக விவரமாக தமிழில் விளக்க ஏற்பாடாயுள்ளது. அன்பர்கள் முன் வந்தால் அடிக்கடி செய்யலாம். கதையை நூலாக வாங்கிப் படிக்கலாம். ஏற்கனவே மலர்ந்த ஜீவியத்தில் கதை வெளிவந்துள்ளது. இந்த ஆராய்ச்சியின் முழுப் பலன் பெற கதையை விவரமாக அறிய வேண்டும். நான் இப்புத்தகத்தை கடந்த 10 ஆண்டுகளில் 30 முறை படித்தேன். படத்தை 15 முறை பார்த்தேன். இருந்தாலும் சில சொற்கள் விட்டுப்போகின்றன. அன்பர்கள் படத்தைப் பல முறை பார்த்தால் பயன் அதிகம். 2009 ஜனவரி முதல் இக்கதை



வழியாக 95% அன்னை சட்டங்களைக் கூற முடியும். கதை வழியாகக் கூறும்பொழுது தெளிவாகப் புரியும் என நான் காண்கிறேன். அச்சட்டங்களில் பலவற்றைக் கீழே குறிப்பிட்டு வாழ்வில் அதன்படி எழும் பலன்களை எழுதுகிறேன். அவற்றுள் ஒரு சட்டம் கதையில் எல்லா இடத்திலும் செயல்படுவதை விவரமாகவும் எழுதுகிறேன்.

**சட்டங்கள்**

1. பாராட்டினால் பலன் உண்டு.
2. ஒரே விஷயத்தைப் பலர் பல வகையாகப் புரிந்து கொள்கின்றனர்.
3. பிறருக்கு நாம் தரும் புத்திமதி பலன் தருவதில்லை, எதிராகவும் மாறும்.
4. குறை கூறுவது எதிரான பலன் தரும்.
5. பிறரைத் திருத்த முயன்றால் அவர் குறை வலுவடையும்.
6. முடிவான பலனை நிர்ணயிக்கும் செயல்கள்.
7. நேரம் பெரியதானால், சொல்லுக்கு உயிர் உண்டு.
8. தவறான சொல்லும் பலிக்கும்.
9. உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசினால் பேசுவது பலிக்கும்.
10. நல்ல காரியத்தை சொல் தடை செய்யும்.
11. அதிர்ஷ்டமான நேரம், பெரு நேரம், அன்னை வரும் தருணத்தில் பேசப்படும் சொல் அப்படியே பலிக்கும்.
12. தெம்பு இல்லாவிட்டால் செயல் கூடி வாராது.
13. நாம் முனைந்து செய்யும் காரியம் கூடி வராது, எதிரான பலனைத் தரும்.
14. க்ஷணத்தில் விஷயம் எப்பொழுது முடியும்? எப்படி அது நடக்கிறது?
15. தயக்கம் தரும் பலன் என்ன?
16. வற்புறுத்தினால் என்ன நடக்கும்?
17. நல்ல எண்ணம் பெற்றுள்ள சக்தி.
18. இரு நிகழ்ச்சிகட்குள்ள தொடர்பு.
19. ஒரு செயல் கதையில் பல இடங்களில் ஏற்படுத்தும் பலன்.
20. சமூகப் பழக்கங்கள் எப்படி ஒருவரைப் பாதிக்கிறது.
21. நம் அபிப்பிராயம், அபிலாஷை ஏற்படுத்தும் விளைவுகள்.
22. சமூகம் எப்படி ஒருவரை ஊக்குவிக்கும்.

23. நாடு மாறுவதால் ஊரும், உலகமும், தனி மனிதனும் பெறும் பலன்.
24. தெம்பு எப்படி சக்தியாகி, பவர் மூலம் பலன் அளிக்கிறது.
25. டார்சி 'பரவாயில்லை' என்று கூறியதற்குள்ள 52 பலன்கள்.
26. ஊர் பழக்கம்.
27. பாத்திரங்கள்.
28. சமூகத்தின் சக்தி.

தியான மையங்களில் இக்கட்டுரைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டால், அன்பர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை கதையுடன் ஒப்பிட முன் வந்தால், கலந்து கொள்ளும் அன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டால் பலன் அதிகம்.

**சட்டம்: குறை கூறுவது கதையில் தரும் பலன்**

✡ விக்காம் பொய்யாக டார்சியைப் பற்றிப் புகார் சொல்கிறான். அதற்கு நேரடியான பலன் அவன் சாயம் வெளுத்து அம்பலப்படுத்தப்படுகிறான்.

✡ மிஸஸ். பென்னட் மிஸஸ். லூகாஸைப் பற்றியும், மிஸஸ். லாங்கைப் பற்றியும் அவதூறாகப் பேசுகிறார்.
ஊர் முழுவதும் அவர் குடும்பத்தைத் தூற்றுகிறது.

✡ காலின்ஸ் படிக்கும்பொழுது லிடியா குறுக்கிட்டதால் கோபித்துக் கொள்கிறான். லிடியா அடுத்தாற்போல் பெரிய காரியம் செய்து விடுகிறாள். காலின்ஸ் லிடியாவைத் திருத்த முயல்வதால் பலனில்லை. பெரிய தவற்றுக்குக் காலின்ஸ் சொல் காரணமாகிறது. நாம் கூறும் குறை அடுத்தவர்க்குப் பயன்படாது. லிடியாவைக் காலின்ஸ் கூறியது போல் 2 நாளில் காலின்ஸை எலிசபெத் குறை கூறுகிறாள்.

✡ காரலின் எலிசபெத்திற்கு எச்சரிக்கை செய்தபொழுது தான் டார்சியை மணக்க விரும்பினாள். அதன் நேரடியான பலன் எலிசபெத் டார்சியை மணந்தாள். தான் எவரைப் பற்றிக் குறை கூறினாளோ - விக்காம் - அவருக்குத் தான் விரும்பிய உறவு - டார்சியுடன் - கிடைக்கிறது.
**நினைப்பு குறையானதால், எதிரான பலன் எழுகிறது.**
**குறை கூறினால் எதிரான பலன் எழும்.**



✡ டார்சி அனைவரும் மட்டம் என நினைக்கிறான்.
அனைவரும் அவனை மட்டமாக நினைக்கிறார்கள்.
**நாம் பிறரை எப்படி நினைக்கிறோமோ, அது போல் அவர்கள் நம்மை நினைப்பார்கள்.**

✡ எலிசபெத் லேடி காதரீனைக் கண்ட பொழுது இவள் கர்வமானவர் என நினைக்கிறாள்.
அதன் பலன் லேடி காதரீன் வீட்டிற்கு வந்து திட்டுகிறாள்.
**எண்ணம் வீண் போகாது. எலிசபெத் நினைப்பது சரியாக இருந்தாலும் அவளுக்கு அப்படி நினைக்க உரிமையில்லை.**

✡ எலிசபெத் டார்சியைப் பற்றியும் காரலினைப் பற்றியும் குறை கூறுகிறாள்.
அவர் இருவரும் சேர்ந்து ஜேன் திருமணத்தைத் தடை செய்கின்றனர்.
**எண்ணமே கெட்டது என்கிறார் அன்னை. நமக்கு நினைக்க உரிமை இல்லை. அதுவும் தவறாக நினைக்க உரிமையில்லை. எலிசபெத் கூறியது உண்மை. ஆனால் அவளை பாதித்தது.**

✡ எலிசபெத் லிடியாவை பிரைட்டனுக்கு அனுப்பக் கூடாது என எச்சரிக்கிறாள். அதன் பலன் லிடியா ஓடிப்போகிறாள்.
எலிசபெத்தின் கவலை லிடியாவுக்குத் தெம்பளிக்கிறது என்பது சட்டம். நாம் நினைக்கும் காரணம் எதுவானாலும், நம் தெம்பு நாம் நினைப்பவருக்குப் போகிறது. அவர் காரியம் நிறைவேறுகிறது. இது உண்மையானால் நினைக்காமல் எப்படியிருப்பது? வேறு என்ன செய்வது?

எலிசபெத் மனம் கலங்குகிறது.

கலங்கும் மனம் பிரச்சினையை உற்பத்தி செய்யும்.

லிடியா போகும்பொழுது எலிசபெத் என்ன செய்திருக்க முடியும்?

அந்த நிலையில் நாமிருந்தால் நாம் எப்படி நடப்பது?

நாம் அன்பர்கள்.

நம் மனம் கலங்க அனுமதிக்கக்கூடாது.

அது போன்ற நிலையில் நாமிருந்தால் **மனம் கலங்காமல் விஷயத்தை அன்னையிடம் ஒப்படைக்க வேண்டும்**. அதன் பலன் லிடியாவுக்கு

நடந்ததற்கு எதிராக இருக்கும். அவளை மணக்க ஒரு ஆபீசர் பென்னட்டை வந்து உத்தரவு கேட்டு மணப்பான்.

**நம் கவனம் எதிரிக்குத் தெம்பு தரும்.**

✡ நெதர்பீல்ட் நடனத்தில் மிஸஸ். பென்னட் பேசுவதைக் கண்டு வெட்கப்பட்டு எலிசபெத் தகப்பனார் உதவியை நாடுகிறாள், பலனில்லை.

**மிஸஸ். பென்னட் உரக்கப் பேசி அவமானப்படுகிறாள்.**

தாயார் டார்சி காதில் விழும்படி ஜேனைப் பற்றிப் பேசுவது சரியில்லை என எலிசபெத் மனம் புழுங்கி, வதைகிறாள். அதன் பலன் மிஸஸ். பென்னட்,

"நான் ஏன் டார்சிக்குப் பயப்பட வேண்டும்?

நான் இப்படித்தான் பேசுவேன்" என அடம் பிடிக்கிறார்.

எலிசபெத் முயற்சிக்கு எதிரான பலன் வருகிறது.

**முனைந்து முயன்றால் பலன் எதிராகும்.**

**முனையும் உரிமை மனிதனுக்கில்லை.**

**எரிச்சல் படவும் உரிமையில்லை.**

**எரிச்சல் படாமலிருந்தால் மிஸஸ். பென்னட் தானே அடங்குவார்.**

**இது நம்ப முடியாதது.**

இது கதையின் முடிவில் உண்மையாகிறது.

**நல்லெண்ணம்**

✡ எண்ணமே கெட்டது, நல்லெண்ணமும் உயர்ந்ததில்லை என்பது அன்னை கருத்து.

✡ நல்லெண்ணம் நல்ல பலன் தரும்.

✡ அனைவருக்கும் முதலில், எனக்குக் கடைசி என்ற சட்டத்தை நான் எழுதி வருகிறேன்.

✡ 27 ஆம் வயதில் இனி திருமணமில்லை, திருமணமில்லாவிட்டால் வருமானமில்லை என்பது சார்லோட் நிலை.



✡ அந்த நிலையில் அவள் ஜேன் திருமணமாக என்ன செய்வது என்பதை நினைத்து எலிசபெத்திடம் பேசுகிறாள்.

அவள் நிலையில் அந்த நல்லெண்ணம் எழ மனம் மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

எலிசபெத் ஷார்லோட் அபிப்பிராயத்தை மறுத்தாலும் ஷார்லோட் கூறும் அறிவுரையின் முக்கியத்துவம் முடிவில் டார்சி ஏன் திருமணத்தை தடை செய்தேன் எனக் கூறும் பொழுது புரிகிறது.

ஷார்லோட்டிற்கு அறிவும், நல்லெண்ணமும், தன்னலமற்ற மனமும் உண்டு.

✡ டார்சி எலிசபெத்துடன் நடனமாட வந்தபொழுது ஷார்லோட் மீண்டும் "விக்காமை நினைத்துக் கொண்டிருக்காதே. டார்சி பல மடங்கு உயர்ந்தவன். இவனை ஏற்றுக்கொள்" என முழு மனதுடன் காதில் மெதுவாகப் பேசுகிறாள்.

✡ அவள் நிலையில் பொதுவாக எழக்கூடியது பொறாமை.

முடிந்தால் இது போன்ற திருமணத்தைத் தடை செய்வாள்.

ஷார்லோட் இரு முறை நல்லெண்ணத்தால் பூரிக்கிறாள்.

எனக்குக் கடைசியில் என்ற நிலையுமில்லை.

எனக்கில்லை. ஜேனும், எலிசபெத்தும் பெரு வாழ்வு வாழட்டும் என்கிறாள்.

**இரண்டு நாளில் ஷார்லோட் திருமணம் முடிகிறது. காலின்ஸுக்கு கிட்டதட்ட 1000 பவுன் சம்பளம். லாங்பார்ன் 2000 பவுனுடன் வருகிறது. கிட்டத்தட்ட பிங்லியின் வருமானம்.**

**நல்லெண்ணம் இல்லாததை உற்பத்தி செய்து**

**பெருவாரியாகப் பலிக்கிறது.**

✡ **நம்மைச் சூழ்ந்துள்ளவர் அனைவரும் வளமாக இருக்க மனம் பூரிப்பது நல்லெண்ணம்.**

✡ **நல்லெண்ணம் பலிக்க தவறாது.**

✡ **அதன் நன்றியைத் தவறாது செலுத்தும்.**

மெரிடன் கிராமத்தில் பென்னட் குடும்பமே முதன்மையானது.

ஷார்லோட் அந்த சொத்திற்கு உரிமை பெறுகிறாள்.

அத்துடன் பென்னட்டுக்கு உறவாகிறாள்.

டார்சிக்கும் உறவாகிறாள்.

எலிசபெத் மூலம் லேடி காதரீனுக்கும் உறவாகிறாள்.

❀ ❀ ❀


**MALARNDHA JIVIYAM**

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Pondicherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mrs. Anuradha Sriram,** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Integra,<br>51, II cross, Jawahar Nagar,<br>Nellithope Post,<br>Pondicherry 605 005. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Balakrishnan,** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 12, I Cross, Venkata Nagar,<br>Pondicherry 605 011. |
| 5. | Editor's Name | : | **N. Asokan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 5, Puduvai Sivam St.,<br>Venkata Nagar Extn.,<br>Pondicherry 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,**<br>5, Puduvai Sivam St.,<br>Venkata Nagar Extn.,<br>Pondicherry 605 011. |

I, (**P.V.Balakrishnan**) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

**sd....................................**

**(P.V. BALAKRISHNAN)**

Signature of the Publisher.

Date : 01-03-2009

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: N. Asokan

# ரூ.35,000 - 2 கோடி - 35 கோடி - ரூ.140 கோடி

வெளிநாட்டு இளைஞர் ஆரோவில்லில் 35 ஏக்கர் நிலம் 1970இல் வாங்கி விவசாயம் செய்தார். விவசாயம் சிறப்பாக இருப்பதால் பலரும் வந்து பார்த்து பாராட்டி மகிழ்ந்தனர். இரண்டாண்டிற்கு முன் ஐரோப்பியர் ஒருவருடன் உள்ளூர் அன்பர் அவரைப் பார்த்துப் பேசினார். விவசாயத்தைப் பற்றியவை சிறப்பான செய்திகள். புறப்பட்டபின் அவர், “இந்த வேலை எனக்குப் பிடித்தது. பலரும் பாராட்டுகின்றனர். நான் 35,000க்கு வாங்கிய இந்த நிலம் இன்று 2 கோடி பெறும். 35 ஆண்டுகளாக வேலை செய்பவர் தொந்தரவு தாங்க முடியவில்லை. விற்றுவிடலாம் என நினைக்கிறேன்” என்றார். ஏக்கர் 1 கோடியென அன்பர் அறிவார். உள்ளூர் அன்பர் ஊர் வந்து நிலைமையை விசாரித்த பொழுது ஒருவர் 40 ஏக்கரை ஏர்போர்ட்டுக்குக் கொடுக்க ஏக்கர் 4 கோடி சொல்கிறார் என அறிந்தார். 2 கோடி பெரிய விலையென நினைப்பவர் வெளிநாட்டார் என்பதால் ஊர் நிலவரப்படி அதன் பெறுமானம் 140 கோடிஎன அவர் அறியவில்லை.

ஆரோவில்லுக்கு ஆத்ம வளர்ச்சியை நாடுபவர்கள் வருகிறார்கள். 35,000 ரூபாய் அன்னை அருளால் 140 கோடியாக உயர்வது நமக்குத் தெரிகிறது. அதே போல் மனநிலையும், ஆத்ம வளர்ச்சியும் ஏற்பட்டதை நாம் அறிவதில்லை. தொழிலாளர் தொந்தரவு அன்பர் மனதைப் பிரதிபலிப்பது. மனநிலையை ஆரோவில் அன்பர் தொழில் சுமுகம் ஏற்படும்படி மாற்றினால் ஆத்மா வளர்வதைக் காண்பார். மனமும், ஆத்மாவும் அந்த அளவு வளர்ந்ததால்தான் விலை இந்த அளவு உயர்ந்துள்ளதுஎன்பது ஆன்மீக சத்தியம்.

- ✡ **பணவாய்ப்பு தெரியும்.**
- ✡ **மனவாய்ப்பு தெரிவது அரிது.**

❀❀❀

# Cosy சுகம்

1968இல் கடலூரில் நான் குடிபோன வீடு எனக்குச் சொந்தமான வீடு. அதன் படத்தினடியே அன்னை *Cosy* என எழுதினார். அவர் கையெழுத்தை சிறு பளிங்குக் கல்லில் அப்படியே எழுதி வீட்டில் பதித்தேன். சுகம், சௌக்கியம், சந்தோஷம், சௌகரியம் ஆகியவற்றைக் குறிப்பது *Cosy*. 1968 முதல் 1976 வரை அவ்வீட்டிலிருந்தேன். ஒரு நாள் என் நண்பர் ஒருவருடைய 4 சகோதரிகள் சிரித்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்தனர். என் மனைவி, “எந்தப் பிரச்சினையிருந்தாலும் நாம் அனைவரும் சிரிக்கக் கற்றுக் கொண்டோம்” என்றார். அவர்களில் ஒருவர் தவிர மற்றவர்க்குத் திருமணமாகவில்லை அன்று. அந்த 8 ஆண்டுகளும் ஆஸ்பத்திரிக்குப் போகவில்லை, கோர்ட்டிற்குப் போகவில்லை, பற்றாக்குறைப் பிரச்சினையில்லை. எந்த நேரமும் அன்பர்கள் வந்தபடியிருப்பார்கள். 1971இல் கார் வாங்கினேன். ஒன்று மூன்றாயிற்று. ஜீப் வந்தது. லாரி வந்தது. என்னை அணுகி 200 ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுத்தவர் 1000 ஏக்கர் வாங்கச் சொல்லி வற்புறுத்தினார். அன்னையுடனிருந்தவர், பகவானுடன் இருந்த அத்தனைச் சாதகர்களும் செவ்வாய், வியாழனன்று வீட்டிற்கு வந்தனர். கவர்னர் வந்தார். ஆசிரமம், ஆரோவில் வரும் அத்தனை முக்கியஸ்தர்களும் தவறாமல் அந்த வீட்டிற்கு வந்தனர். அந்த வருஷங்களில் ஏராளமான பிரச்சினைகள், மனம் புண்படும் செயல்கள், சொற்கள், இல்லாத உரிமையைக் கேட்டு வம்பு செய்பவர்கள்என ஆயிரம் பிரச்சினைகள் வந்து தீர்ந்தன. இந்த ஆண்டு அன்னை அன்பர்களைப் பற்றிக் கூறியுள்ளதை - *அன்பர்கட்குப் பிரச்சினையேயில்லை* - மனதில் கொண்டு இந்த 8 ஆண்டு நிகழ்ச்சிகளை மனதில் மீண்டும் கொண்டு வந்து சிந்தனை செய்தேன். நான் விவரமான ஆராய்ச்சி செய்ததின் முடிவுகள் இரண்டு.

- ✡ *அந்த வீடு உள்பட, நிலம் உள்பட நான் கேட்காமல் அன்னை கொடுத்தவை.*

  *Cosy என்ற சொல்லின் லக்ஷணத்திற்குரிய வாழ்வு அது.*
- ✡ அந்த வீட்டில் நான் அனுபவித்த அத்தனை பிரச்சினைகளும் நானே வலியப் போய் ஏற்றுக் கொண்டு அனுபவித்தது.

உதாரணமாக விலை கொடுத்து வாங்கிய வீட்டுக்குக் கிரயப் பத்திரம் எழுதாததால் வீட்டைக் காலி செய்ய வீட்டுக்காரர் பொய்க் கேஸ் போட்டுத் தோற்றார். அன்னை அருளைமட்டும் தருகிறார். இருள் கலப்பில்லாவிட்டால் ருசியில்லையென அன்பன் இருளை நாடிப் போய் அனுபவிக்கிறான்.

❀❀❀

**March 2009 Jiviyam 14 Malar 11**
**Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)**
**Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11**
**Price: Rs.5/- WPP No.45/09-11**

**புதிய வெளியீடுகள்**

**கர்மயோகியின்**

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம்** (பாகம் 2) ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-

*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-

**(CONCISE TRUISMS)**

**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

**பாண்டியில்**
**மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,**
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2214231

**சென்னையில்**
**மாம்பலம் தியான மையம்,**
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191